உ

சிவமயம்.

# பல்லவநகரம்

## காஞ்சி

## சரித்திரச்சுருக்கமும் படமும்.

இவை

சென்னை ஐகோர்ட் வக்கீல்

த. வரதப்ப நாயகர் B.A.B.L.,

அவர்களால் இயற்றப்பட்டு

மதுசரவேணி விலாசம்பிரஸில்

பதிப்பிக்கப்பட்டன.

1911.

விலை அணா 2

A. Krishna & Co., Printers, Madras. N.C.

30 JAN 1912
MADRAS.

# பல்லவ நகரம்.

கஞ்சி

## முதல் அத்தியாயம்.

### பூமியின் விவரம்.

தென்னிந்தியாவின் புண்ணிய க்ஷேத்திரங்களுட் சிறந்தது காஞ்சிபுரம். இந்த க்ஷேத்திரமகிமையாற் பலன்பெறுவதற்கும், நகரக்காட்சியின் பெருமையைக் கண்ணுறவும், புராதனபொருள் விசேஷங்களை யறியவும் பலமதத்தினரும் நாள்தோறும் இந்நகரைத்தரிசிக்க வருகிறார்கள். சத்தபுரிகளில் ஒன்றான இக்காஞ்சிபுரி தென்காசி என்றும் வழங்குகிறது. இந்நகர் புராதனபொருள் விசேஷக்காட்சியில் சூரத்நகரத்திற்கு இரண்டாவது. இக்காஞ்சிபுரி பாலாற்றின் உபநதியான வேகவதியாயப்பெற்று சென்னைபுரியின் தென்மேற்குமூலையில் 45 மைலிலும், மேற்கிலுள்ள ஆற்காட்டுக்கு 27 மைலிலுமுள்ளது. இப்பட்டணத்திற்கு 140 மைல்தூரத்தில் பெங்களூரும், 20 மைலளவில் செங்கல்பட்டும், 75 மைலுக்கப்புறம் கூடலூரும், 37 மைலில் பறங்கிமலையும்,

38 மைலில் சைதாப்பேட்டையு மிருக்கின்றன. சமுத்திரமட்டத்திற்கு 274 அடி உயரமும் 6 மைல் நீளமுமுள்ள இக்காஞ்சீபுரத்தின் தெருக்கள் அகன்று இருபக்கங்களிலும் தென்னஞ்சோலைகளாலும், பலாமுதலிய விருட்சவரிசைகளாலும் சூழ்ந்தது. சென்னையிலிருந்து செங்கல்பட்டு மார்க்கமாய்த் தென்னிந்தியா இருப்புப்பாதையிலும், அரக்கோணம் வழியாய்ச் சென்னை தென்மராட்டா இருப்புப்பாதையிலும், இந்நகருக்குப் போகலாம்.

காஞ்சிபுரமென்பதற்கு காந்திப்பட்டணம் என்பது பொருள். இச்சமஸ்கிருதபதம் ஆங்கிலத்தில் காஞ்சிவரமென மருவியது. ஸ்தலபுராணங்களொன்றனுள் கஞ்சி என்றால் பிரமன் தன் கோரிக்கையை நிறைவேற்றிக்கொண்ட இடமென அர்த்தஞ்சொல்லப்பட்டிருக்கிறது. இத்தலபுராணத்தில் காஞ்சி ஓர் மஹாநகரமென்றும் இதன் நான்குதிக்கிலும் பக்கத்திற்கு ஐந்துயோசனை தூரத்தில் நான்குபிலத்துவாரங்க ளமைந்திருக்கின்றனவென்றும் கூறப்பட்டிருக்கிறன. இதன் கீழ்வாயில்தான் மஹாபலிபுரமாம் (எழு கோவில் பட்டணம்) மேற்கு, தெற்கு, வடக்கு, வாயில்கள் முறையே விரிஞ்சிபுரமும், தேவல்பூரு, (திண்டிவனம்) நாராயணபுரமுமாமென வுரையப்பட்டிருக்கிறன. இவ்வாயில்கள் ஒவ்வொன்றுக்கும் முறையே ஸ்தலசயனப்பெருமாளைப் பார்க்கசகர

வேள்வரும் சிவனும் செல்வப்பெருமானும் நியமிக்கப்பட்ட துவாரபாலர்களாம். இப்பதி பிரமதேவரால் கட்டப்பட்டு பைரவமூர்த்திகாவலு ளமைக்கப்பட்டதாம். கச்சிப்பதியென 12-வது நூற்றாண்டின் ஆதித்தமிழ் நூலில் வழங்கப்பட்டது, சீனதேசவாசியான ஹியூன் சியாங் கி. மு. 3-வது நூற்றாண்டில் தேச சஞ்சாரம் செய்தகாலத்தில் இந்தியாதேசத்தையும் பார்த்திருக்கிறார். இவர் இந்நகர விசேஷங்களை எழுதியிருக்கும் நூலில், இந்நகரின் பெயரைக் கியிஞ்சி புலோவெனவும் இதன் பாதுகாப்பிற்கு 5 மைல் சுற்றளவுள்ள ஒரு கோட்டையிருந்ததாகவும் எழுதியிருக்கிறார். இந்நகருக்கு மோட்சபுரி, காமக்கோடிபீடம், சத்தியவிரத க்ஷேத்திரம், திருக்கச்சி, பெருமாள்கோயில் என்ற வேறுபெயர்களுமுண்டு. திருக்கச்சி, பெருமாள்கோவில் என்னும் பெயர்களை இப்போதும் வைணவர்கள் உபயோகப்படுத்துகிறார்கள். இந்நகரில் பிரதானமான இரண்டு சைவ, வைணவ கோவில்கள் இருப்பதால் இந்நகரை, சிவகஞ்சி, விஷ்ணுகஞ்சி, யென வேறுபடுத்தியுங் கூறுகிறார்கள். ஆனால் தற்கால முனிசிபல்விசாரணையில் இந்நகரத்தைத் தொன்றுதொட்டுள்ள 12 பேட்டைகளாகப் பிரித்திருக்கிறார்கள். இவ்வூரை ஆகாசசஞ்சாரி ஒருவன் கண்ணுற்றால் இதன் வடிவம் S வடிவமாய் காணேரிட்ட இரண்டுவில் தலைகீழாய்ச் சேர்ந்ததுபோல்காணும். இப்பட்டணம் 3 மைல் நீள

மும் 2 மைல் அகலமும் உள்ளது. இப்போது பெரியகாஞ்சிபுரம் அல்லது சிவகஞ்சியென்பதே ஆதிகாஞ்சிபட்டணமாம். விஷ்ணு கஞ்சியென்பது கஜேந்திரநகரமென்று அர்த்தத்தைத்தரும் திருஅத்தியூர் என்று வழங்கப்பட்டது. விஷ்ணு கஞ்சி என்று பாறினதாய் ஓர் புராணிகர் எழுதுகிறார். இப்பட்டணத்தில் சிவாலய விஷ்ணு ஆலயங்களை எங்கும்காணலாம். புராண இதிகாசப் பிரமாணப்படி இத்தகைய தேவாலயங்களின் தொகை 66,000. இவற்றில் 16,000 சிவாலயங்களும், 12,000, விஷ்ணு ஆலயங்களும் 5,000 சக்திகோவில்களும், 33,000, விக்னேஸ்வரர், சிவசுப்ரமணியர், ஆஞ்சநேயாதிகளின் சந்நிதிகளும் ஏற்பட்டிருக்கின்றன. பழமையாய் எத்தனை ஆயிரங் கோவில்களிருந்திருப்பினும் இப்போது 108 (அஷ்டாசதகோவில்களும்) அவற்றுள் 12 (துவாதசகோவில்களும்) மிகப் பிரதாபமானவைகளாம்.

## Ward I. (பாகம் 1.)

ஆங்கிலேய கவர்ன்மெண்டார் இத்தலநிலைவரப்படத்தில் இவ்வூரை நான்குபாகங்களாகப் பிரித்திருக்கிறார்கள். இதில் அதிக முக்கியமானது விஷ்ணுகஞ்சி. இது வரதராஜசுவாமிகோவிலுக்குக் கிழக்குப்பாரிசத்தில் ஏற்பட்டிருக்கின்றது. இது திருஅத்தியூரென வழங்கப்பட்டது. வெகு நாளைக்குப்பிறகு விஷ்ணுகஞ்சியும் சிவகஞ்சியும்

ஒன்றாய்ச் சேர்க்கப்பட்ட காலத்தில் திருஅத்தியூரிலிருந்த குடிகள் கோவிலுக்கு மேற்புறமாய்ப் புதியனவாய் அமைக்கப்பட்ட விடங்களில் குடியேறினார்கள். ஆகையால் கோவிலுக்குக் கிழண்டையில் இப்போது சில குடிசைகளும் புழைக்கடை வீடுகளும் காணப்படுகின்றன. விஷ்ணு காஞ்சியிலிருக்கும் ஸ்ரீ வரதராஜ ஸ்வாமி கோவில் கட்டடம் ஊரின் கிழக்கடையில் இருக்கின்றது. இதன் வெளிப்பிரகார மதில்கள் கிழக்கு மேற்கில் 320 அடி நீளமும், வடக்கு தெற்கில் 283 அடி நீளமும் 30 அடி உயரமுமுள்ளன. கிழக்கு மேற்கு மதில்களில் இரண்டு கோபுரவாயில்களும் இருக்கின்றன. கோவில் உற்சவாதி போக்குவரத்துகளுக்கு மேற்கு கோபுரமே பிரயோசனப்படுகிறது. கிழக்குக்கோபுரம், மேற்குக்கோபுரத்திலும் உயர்ந்தது. சிற்பசாஸ்திர அனுபவப்படி கட்டியிருக்கும் இரண்டு கோபுரங்களிலும் கட்டட விசேஷங்களமைந்திருக்கின்றன. கோவில்களுக்குக் கீழ்ப்புறத்திலிருந்த திருஅத்தியூர் பாழானபிறகு இக்கோயிலின் கீழ்க்கோபுரவாயிலால் உற்சவாதிகள் நடந்திருந்த வழக்கம் நின்று மேல்கோபுரவாயிலாகவே சகலமும் நடக்கத்தொடங்கி அதில் போக்குவரவுக்கு அனுகூலமாகச் சிலமாறுபாடுகள் ஏற்பட்டன. இவ்வெளிப் பிரகாரத்திற்குள் இரண்டாம் பிரகாரமுண்டு. இவ்விரண்டு பிரகாரங்களுக்கும் மத்தியில் நாலுகால்மண்டபமும் ஆனந்தஸரஸ்

என்னும் பொய்கையும் அமைந்திருக்கின்றன. வேலூர்க்கோட்டை கோயிலில் பாழடைந்து இருக்கும் கல்யாணமண்டபமும் இம்மண்டபமும் ஒரே மாதிரியானது இரண்டாவது பிரகாரத்திற்குவரச் சிறியகோபுரவாயில் ஒன்றுண்டு. இதற்குள் பிரகாரமான மூன்றாவது பிராகாரமுமுண்டு. இது அத்திகிரியைச்சுற்றி கட்டியிருக்கிறது. இந்தப் பிரகாரத்தில் பெருந்தேவித்தாயார் மூலஸ்தானமும், அபிஷேகமண்டபமும் கட்டியிருக்கின்றன. இம்மண்டபச்சுவரில் சோழர்களின் சாசனங்கள் வரையப்பெற்றிருக்கிறன. பெருந்தேவித்தாயார் கோவில் விஜயநகர வேலைச் சாயலைப் பொருந்தினதாய் வெகு நேர்த்தியாயிருப்பதுந் தவிர இதர மாதிரிகளானசித்திரகல் தச்சுவேலைத் திறங்களாலும் சிறந்திருக்கின்றது. மூன்றாவது பிரகாரத்திலிருக்கும் அத்திகிரியில் வரதராஜஸ்வாமி கோயில் கொண்டிருக்கிறார். இச்சந்நிதி வாயிற்படி பஞ்சலோகங்கலந்து அமைக்கப்பட்ட பரப்புகளால் பிணைக்கப்பட்டது. சந்நிதி ஈசான்ய மூலை மச்சில் சாஸ்திர யுக்தமாயமைந்ததில்தங்கமேனிக்கெவுளி ஒன்றிருக்கிறது. இதை தெரிசித்தால் பல்லி விழுவதினாலுண்டாகும் தீயபலன் விலகுமென்னும் கொள்கையுண்டு. வரதராஜஸ்வாமி சந்நிதி அடிவாரத்திலிருக்கும் நரசிம்மஸ்வாமி சந்நிதி பழமையானது. வெகுகாலத்திற்குப் பிறகு பூமி மட்டத்தை உயர்த்தி வரதராஜஸ்வாமி எழுந்

திருநெவித்தசாகத் தெரியவருகிறது. சொன்ன சவிஸ்தாரங்களால் இக்கோவில் கட்டடங்கள் ஒருவர்கட்டியதென்றாவது ஒரேதலைமுறையில்கட்டியதென்றாவது நினைக்க இடமில்லை. சிலநாளைக்கு பிந்தியவைகளான இரண்டுசோழர்சாசனங்கள்நரசிம்மசுவாமி கோவிலிலும், வேறு சிலசாசனங்கள் அபிஷேகமண்டபத்திலும் இருக்கின்றன. அன்றியும் 11-வது நூற்றாண்டில் காஞ்சியில் ஆட்சிபுரிந்த கண்டகோபாலபூபதி தனது புத்திரபாக்கியத்திற்காக வரதராஜஸ்வாமியைப் பிரார்த்தித்துக்கொள்ள அச்சுவாமி அவ்வரசரின்சொற்பனத்தில் தோன்றி வரங்கொடுத்தபடி இத்திருக்கோவில் நிருமிக்கப்பட்டதாகச்சிலாசாசனமிருக்கின்றது. இந்தக்கோவிலில் எந்தபாகம் யாரால் கட்டப்பட்டதென தெரிந்துகொள்ளக் கூடாதிருப்பினும் இவ்விசேஷ சாசனம் நரசிம்ம சுவாமி கோவிலி லிருப்பதால் இத்தேவாலயமும் வரதராஜஸ்வாமி கோவிலும், இவ்வரசராலேயே கட்டப்பட்டவை யென நினைக்கும்படி இருக்கின்றது. ஏகாம்பர நாதர் சந்நிதியிலும், ஸ்ரீகாமாட்சியம்மன் சந்நிதியிலும், கோபுரங்களையும் பிரகாரங்களையும் உயர்த்திக்கட்டிய விஜயநகர மன்னர்களால் பெருந்தேவியார் கோவிலும் இரண்டு வெளிப்பிரகார கோபுரங்களும் கட்டப்பட்டனவென்று சில சாசனங்கள் உள்ளன.

வரதராஜஸ்வாமி கோவிலிற்கு விசேஷ வருமானங்களுண்டு. பிரதிதினமும் ஏதேனுமொரு

உற்சவம் நடந்துகொண்டே வருகின்றது. மேற்படி கோவில் பிரம்மோற்சவம் வைகாசிமாதத்தில் ஆரம்பித்து பத்துநாளைக்கும் பகலிலும், இராவிலும், உற்சவம் நடக்கின்றன. இந்த உற்சவங்களில் 7-ம் நாள் இரதோற்சவம். இந்த இரதத்தில் சுவாமியும் தாயாரும் புறப்பாடாகி விஷ்ணு கஞ்சியைச் சுற்றிக்கொண்டு ஆடிசன்பேட்டைக்குப்போய் 3 மைல்தூரத்திலிருக்கும் பெரியகாஞ்சிக்குப்போய் அவ்வூரைச்சுற்றிவிட்டு அங்கு ராஜவீதியில் தண்ணீர்தொட்டிக் கெதிரிலிருக்கும் கங்கணமண்டபத்தில் தங்கிச் சந்நதி வந்துசேருதல் வழக்கம். அன்றியும் பிள்ளைபாளையம் நெசவுக்காரர்கள் அதிக பக்திசிரத்தையோடு மேற்படி இரதத்தை இழுத்துக்கொண்டு போகிறார்கள். அவர் இத்தேர்வடம்பிடிக்காவிட்டால் அவ்விரதம் நிலையில்வருவதுகஷ்டமாம். இவ்வுற்சவத்தில வரதராஜ ஸ்வாமி பெரிய காஞ்சீபுரத்துக்குப் போய் அவ்வூரை வலம் வந்தவுடனே ஏகாம்பரநாதர் தன் நந்தியை ஏவி நகர் சோதனைசெய்து வருவதுவழக்கம். வரதராஜஸ்வாமி கங்கணமண்டபத்தி லிறங்குவதற்காகவும், அவ்வூர்வலம் வருவதற்காகவும், மற்றச் செலவிற்காக வரதராஜஸ்வாமி ஏகாம்பரநாதருக்குக் கப்பம்கொடுக்கும் ஐதீகம் நடக்கிறது. இம்மூன்று விசேஷங்களும் நாளைக்கும் நடந்துவருகின்றது.

## Ward II. (பாகம் 2.)

இந்த பாகத்தில் ஆடிசன்பேட்டையும் அய்யங்கார் பாளையமும் முக்கியமானவை - சின்னகாஞ்சிபுரத்தைப் பெரிய காஞ்சிபுரத்தோடு சேர்க்கிற பெரியதெரு ஆடிசன்பேட்டை. ஆட்சன் என்னும் கலெக்டர் இத்தெரு ஏற்படுத்த முக்கியஸ்தராய் இருந்ததால் இதற்கு ஆடிசன் பேட்டை என்று பெயர் உண்டாயிற்று. இது பட்டணத்திற்கு மத்தியாய் வியாபாரத்திற்கு முக்கியஸ்தானமாயுமிருக்கிறது. விஷ்ணுகஞ்சிக்கும் ஆடிசன் பேட்டைக்கும் இடையில் வீதியின் இருபக்கங்களிலும் இரண்டு ஸ்தம்பங்கள் திருஅத்தியூரின் எல்லைக்கற்களாக நடப்பட்டிருக்கின்றன, இக்கம்பத்திற்குச் சிறிது தூரத்திற்கப்பால் வரத ராஜஸ்வாமி தேரடியும், அய்யங்கார் பாளையமுமிருக்கின்றன. இந்தப் பாளையம் காஞ்சிபுரத்தின் 12 பேட்டைகளுள் ஒன்று. தென்னிந்தியாவில் பேர்போன பட்டுச்சேலைகளும், பட்டுக்கரை சரிகைச்சவஷ்டி முதலியவைகளும் செய்கின்ற கைக்கோளர் இங்கு விசேஷமாக வாழ்கின்றனர்.

## Ward III. (பாகம் 3.)

இப்பிரிவில் கைலாயநாதர் சந்நிதியும் கச்சபாலீஸ்வரர் கோவிலும் பிள்ளையார்பாளையமும் அடங்கியவை. காஞ்சியில் பழமையாயுள்ள கைலாஸநாதர் கோவில் கச்சபாலீஸ்வரர் கோவிலிற்கு முக்

கால் மைல் தூரத்தில் வயல்வெளிக்கிடையிலுள்ளது. இந்தக்கோவில் மூன்று தனித்தனிச் சிவன் கோயில்களாகப் பல்லவர்களான ராஜஸிம்மேஸ்வரர் அவர்மனைவி ரங்கபாடகி, அவர்கள் புத்திரர் மஹேந்திரவர்மன் என்பவர்களால் கட்டப்பட்டது. இக்கோவில் 1366-ம் வருஷத்தில் இராஜஸிம்மேஸ்வரர் கோவிலென வழங்கியது. இப்பொழுது வழங்கும் பெயர் எப்போது எந்தக் காரணத்தினால் உண்டானதென்று தெரியவில்லை. இந்தக்கோவில் கட்டடமும் மகாபலிபுரம் கல் தேர் கட்டடமும் ஒரேவிதமாய்க் காணப்படும். கிருதவர்மன் காலமான 561-ம் வருஷத்தில் மஹேந்திரவர்மனிருந்ததாகத் தெரிகிறதினால் இந்தக்கோவில், மஹேந்திரவர்மன், இராஜஸிம்மேஸ்வரன் இவர்களால் 567-ம் வருஷத்திற்கு முந்தியே கட்டப்பட்டதாக எண்ணலாம், இந்தக் கோவில் கட்டி நான்கு நூற்றாண்டு வரையில் பல்லவர்கள் அரசாட்சி உச்சம் பெற்றிருந்ததால் இந்தக் கோவிலும் நல்ல நிலைமையிலிருந்ததாகக் காணப்படுகிறது.

பல்லவர்கள் நிலைமையைப்பற்றிய சிலாசாசனங்கள் இந்தக் கோவிலில் அமைக்கப்பட்டிருக்கின்றன. கடைசியாக வந்த பல்லவ அரசர்கள் ஒவ்வொருவரும் சிலாசாசனங்கள் இந்த கோவிலிலமைத்திருக்கிறார்கள். சளுக்கியர்களும் அதே

விதமாய் இந்தக்கோவிலில் சிலாசாசனங்களமைத்திருக்கிறார்கள். இக்கோவில் பல்லவர்களுடையதானதால் இதற்கு அவர்கள் அநேக மானியங்கள் விட்டிருக்கிறார்கள். 12-வது நூற்றாண்டில் சோழர்கள் இந்நகரத்தை ஆண்டபோது இக்கோவிலை கபாடபந்தனம் செய்து இதிலிருந்தச் சொத்துக்கள் யாவற்றையும் அருகாமையிலுள்ள அனையபாதாங்கவேத நாயனார் கோவிலில் பத்திரப்படுத்தினார்கள். இரண்டு நூற்றாண்டுவரையில் இக்கோவில் திறக்கப்படவேயில்லை 1369 வருஷத்தில் இந்திய கவர்ன்மெண்டு இராஜாங்க உத்திரவு பெற்று கோவிலைத்திறந்து முன்னமே இராஜாங்கத்தாரால் எடுத்துக்கொண்ட சொத்துகளையும் கோவிலில் சேர்ப்பித்தார்கள். இப்போது ஒருவருஷத்திற்கொருதரம் சிவராத்திரியன்று கோவில்வாசல் திறக்கிறார்கள்.

இராஜவீதி மூலையில் முனிவிபல் ஆபீசிக்குப் போகும் திருப்பத்தில் கச்சபாலீஸ்வரர் திருக்கோவில்கொண்டிருக்கிறார். அதில் சிலபாகம் பல்லவர் காலத்தனவாகவும் கோவில்பிரகாரமும், கோபுரமும், மூலஸ்தானமும் சோழர்காலத்தனவாகவும், மற்றவை அவற்றிற்குக்கூடப் பிந்தியனவாகவும் ஏற்படுகின்றன பிள்ளையார்பாளையம் செசவுக்காரர்கள் இக்கோவிலுக்கு முக்கியபக்தர்கள். இவர்கள் தங்கள் தறி ஒன்றுக்கு ஒரு ரூபாய்விகிதம் வரு

ஷபிரதி வருஷமும் இக்கோவிலிற்குக்கொடுக்கும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

கஞ்சியிலிருக்கும் 12 பாளையப்பட்டில் ஒன்று (வேகவதியாற்றுக்கு இடபாரிசத்திலுள்ள) பிள்ளையார்பாளையம். இங்கே முக்கியநிவாஸிகள் நெசவுக்காரர்கள். கச்சாலீஸ்வரர் கோவில் கணக்கின்படி இப்பிள்ளையார் பாளையத்தில் 5,000 தறிகளில்வேலை நடப்பதாகத் தெரிகின்றது. இந்த நெசவுக்காரர்கள் விசேஷமாய்ப் பலவித வேஷ்டிகள்நெய்கிறார்கள். இவர்கள்நல்ல அந்தஸ்திலுமிருக்கிறார்கள். பிள்ளையார் பாளையமென்பது பிள்ளை பாளையமெனமருவின.

## Ward IV. (பாகம் 4.)

இக்கடைசிப்பிரிவு சிவகஞ்சி:—சிவகஞ்சியில் அநேகமாயிரம் சிவன்கோயில்களும் சிலவிஷ்ணு கோவில்களுமுள்ளது. அவைகளுள் அதிகமுக்கியமானவை ஏகாம்பரநாதர்கோவிலும் காமாட்சியம்மன் கோவிலும் வைகுண்டப்பெருமாள்கோவிலுமாம். இதில் ஏகாம்பரநாதர் கோவில் ஊருக்குமேல் கோடியிலிருக்கிறது இக்கோவிலிலுள்ள சிவலிங்கம் மணலிலிங்கமாம். கஞ்சியில் இது பெரியகோவில் இதில் செற்பகிரஹமும் ஐந்து பிரகாரங்களுமுண்டு. செற்பகிரஹத்திற்கு வெளியில் இரண்டாவது மூன்றாவது பிரகாரத்திற்கிடையே தென்மேற்குமூலையாய் அதிக அதிசயமுள்ளதாம்

கண்டோர் மனங்கவரும்படியான சகஸ்ரலிங்க சேவை கொடுக்கும்படியானதுமான இலிங்கம் ஒன்றுண்டு. இந்தலிங்கத்தில் வரிசைக்கு 40 ஆக இருபத்தைந்து வரிசையுள்ள 1000 லிங்கம் தோன்றும். மூன்றும் பிராகாரத்திற்கு வெளியே ஆயிரக்கால்மண்டபம் சிதம்பரத்திலிருக்கும் மண்டபத்தைப்போல்கட்டப்பட்டிருக்கின்றது. மற்ற இரண்டுபிராகாரமதில்களிலும் சிலகோபுரங்கள் உண்டாயிருக்கின்றன. அவற்றில் சந்நிதிவாயில் கோபுரம் 180 அடி உயரமாய்ச் சென்னையிலிருக்கும் விளக்குக்கூட்டின் உயரத்திற்குச் சமமானது. கோவில் கட்டடங்களில் எவையும் நேராயிராமல் கோணலாயிருக்கின்றன. இதற்குககாரணம் ஒவ்வொரு சிறுகட்டடமும் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொருபரம்பரையாரால் கட்டப்பட்டது.

7-வது நூற்றாண்டில் இந்தச் சிவஸ்தலம் தென்னிந்தியாவில் அதிகப்பெருமையும் பிரசித்தியும்பெற்றிருந்தது. இந்த ஸ்தலமகிமையை மாணிக்கவாசகர் தம் திருவாசகத்தில் பலவிதமாகப் புகழ்ந்துபாடியிருக்கின்றார். பல்லவர்களுக்குப்பிரதான தேவதையான ராஜஸிம்மேஸ்வரர் கோவிலிருப்பதால் இந்தக் கோவிலைப்பற்றிப் பல்லவர்கள் அதிகசிரத்தையெடுக்கவில்லை. இக்கோவிலில் ஆதி சிலாசாசனம் 11-வது நூற்றாண்டின் சோழ சாசனமாயிருக்கிறது. சோழர்கள்கட்டின தெற்

பகிரகமும், மூன்றுவது பிராகாரத்தில் சிலகட்டடங்களும், சோமேஸ்வரர் நிலயமும், மூன்றுவது நான்காவது பிராகாரத்தில் வடவண்டைபாதையில் பாழடைந்திருக்கும் கோவிலுமாம். பல்லவர்களுடைய ஆயிரக்கால்மண்டபமும், அதைச்சார்ந்த பல்லவகோபுரமும், அதிக முக்கியமானவைகள். இக்கோபுரம் தற்காலம் பள்ளிகோபுரமென்று வழங்கப்படுகிறது. இவைகளை இப்போதும் அவர்கள் சந்ததியாராகிய பல்லவர் அல்லது பள்ளிகள் பழுதுபார்த்துவருகிறார்கள். இந்தக் கோவிலிலுள்ள பெரிய மாமரம் விசேஷபெருமை பெற்றது. இந்துமத ஆசாரமில்லாதவர்கள் பிரவேசிக்கக்கூடாத இரண்டாவது மூன்றுவது பிராகாரயத்தியில் இம்மாவிருக்ஷம் தோன்றியிருக்கிறது. இம்மரம் 20 அடி சுற்றளவுள்ளதாய் பூமிக்கு 2 அடி உயரத்தில் நாலுகிளைகளாகப் பிரிந்திருக்கிறது. முன்காலத்தில் வருஷமுழுமையும் நாளுக்கொருபழம் இம்மரத்தில் பழுக்குமாம். இக்கலியுகத்தில் அது நின்றுவிட்டதாம். இப்போது இந்நாட்டில் மாங்காய்காலமான ஏப்ரல், ஜூலைமாதங்களில் இம்மரம் பூத்துக்காய்த்திருக்கிறது. இந்தப்பழங்களில் ஒவ்வொரு கிளையின் பழங்களும் ஒவ்வொருவிதமான (தித்திப்பு, கைப்பு, துவர்ப்பு, கார்ப்பு, உவர்ப்பு, புளிப்பு, என்னும்) ருசியுள்ளவை என்று சொல்லுகிறார்கள். நடேசசாஸ்திரி என்னும் பண்டிதர் தாம் இப்

பழங்களின் சிலவற்றை ருசிபார்த்ததில் பலசுவை யுள்ளனவாயிருப்பதாகச் சொல்லுகிறார்கள்.

(1) ஏகாம்பரநாதர் மகிமைபெற்ற இந்த ஸ்தலம் சென்ற எட்டு, ஒன்பது நூற்றாண்டுகளாக இருக்கின்றது. ஏகாம்பரம் என்னும் பதத்திற்கு தனி ஆகாயம் எனப்பொருள்படும் என்பதற்கு அநேக பிரமாணங்களுண்டு. இம்மரம் 500 அல்லது 600 வருஷங்களுக்கு முந்தியதென நினைக்கிறார்கள். சிலர் நான்குகிளைகளும் நான்குவேதங்களென்றும் அதனடியில் பார்வதி தவம் செய்ததாகவுஞ் சொல்லுகிறார்கள்.

கர்னாடகசண்டையிலும் மைசூர்யுத்தத்திலும் ஏகாம்பரநாதராலயமும் வரதராஜராலயமும் எதிரிகளுக்குப்பயந்து அடைக்கலம் புகும்கோட்டைகளாகஉபயோகப்பட்டனவாம். ஆங்கிலேயர்இதை ராணுவவீரர்கள் தங்குமிடமாகவும் யுத்தகளத்தில் அடிப்பட்டவர்களுக்கு வைத்தியசாலையாகவும் உபயோகப்படுத்தினார்கள். ஐதர் ஆலி 1780-வருஷம் இக்காஞ்சியை முற்றுகையிட்டு இக்கோவிலிற்கு அநேக நஷ்டங்கள்செய்தான். ஐதர் ஏகாம்பராலயகோபுரத்தைப்பீரங்கிகுண்டுகளால்உடைக்க அதிக சிரமம் எடுத்துப்பார்த்தான். இப்போதும் அவ்வடையாளங்களைக் காணலாம். ஐதர்ஏகாம்பர மஹாலிங்கத்தை வேரோடு கெல்லி எடுக்கமுயன்

றதாக நடேசசாஸ்திரியார் எழுதியிருக்கிறார். அப்போது கோவில் குருக்கள்மார் எதார்த்தலிங்கமிருக்கும் ஸ்தானத்தை ஒருசுவரால் மறைத்து அதற்கெதிரே மற்றொரு புதியலிங்கத்தை ஏற்படுத்தி அதை மகம்மதிய வீரர்களுக்குக்காண்பிக்க அந்த லிங்கசேவைசெய்ததும் அம்மகம்மதியர்கள் அக்கோவிலுக்குள் பிரவேசிக்கிறபோதிருந்த கோபாவேசமாறி அந்தலிங்கத்திற்குச் சாஷ்டாங்கநமஸ்காரம் செய்தார்களென்பது புராதனகதை. ஐதர் பிறகு, இந்தக் கோவிலுக்கு யாதொரு கெடுதியுஞ்செய்யாமல் வெளிவந்துவிட்டான்; இப்போதும் இந்தலிங்கத்திற்கு ஐதர்லிங்கமென்று பெயர் வழங்குகின்றது. *

2. இரண்டாவது முக்கியமான கோவில் காமாட்சியம்மன் சந்நிதி. இதில் துவஜஸ்தம்பம் புதுமைபானஉருவமுள்ள கல்கட்டடம். அதன் சிகரத்தில் தீயிரத்தி ஒன்றுண்டு. இந்த உருவம் இந்து மத கொள்கையில்லாத ஜெயின் மதக்குறி பெற்றது. இந்தக் கோவிலில் 7½ அல்லது 8 அடி உயரமுள்ள ஒரு ஜெயினர் பிம்பமும் கிடக்கிறது. ஆகையால் இந்தக்கோவில் ஒருகாலத்தில் ஜெயின மதஸ்தர்களுடையதாகவாவது அல்லது ஜெயினர் கோவில் சாமான்களால் கட்டியதாகவாவது அல்லது இந்துக்கள் கோவிலை ஜெயினர்

* இங்கிரின் புராணகதை இரண்டாம் அதிகாரத்திற் காணலாம்.

கோவிலாகமாற்ற ஒருகாலத்தில் ஜெயினர் முயன் றதாகவாவது இருக்கவேண்டும். அத்வைதமத ஸ்தாபகரான சங்கராச்சாரியர் உருவமும் இந் தக்கோவில் தென்மேற்கு மூலையில் வைத்திருக் கின்றது.

கஞ்சி காமாட்சி, மதுரை மீனுட்சி, காசி விசாலாட்சி, என்னும் வழக்கச்சொல் தொன்று தொட்டு வருவதால் இந்தக் கோவில் பழமையி லும் பழமை எனச்சொல்வதுண்டு. இது புராதன மான தென்பதற்கு இதுவேபோதுமான சாட்சி யாகாது. இதைப்பற்றி நாலாயிரப்பிரபந்தத்திலா வது தேவாரத்திலாவது ஒன்றுஞ் சொல்லப்பட வில்லை. 14 வது நூற்றுண்டுக்கு முந்திய எந்தப் புத்தகத்திலும் வரையப்படவில்லை. முதல் முதல் இந்தக் கோவிலைப்பற்றி எழுதியிருப்பது 14-வது நூற்றுண்டினிறுதியில் பழைய கட்டடத்தைப் புதுக்கியகாலமெனக்கொள்வதும் கூடாமை. அப் படியிருந்தால் ஏகாம்பரநாதர், வரதராஜர், கைலாஸ நாதர் கோவில்களிலாவது வரையப்பட்டிருக்கும்.

3. பரமேஸ்வர விண்ணகரத்தி லிருக்கும் வைகுந்தப்பெருமாள் சந்நிதி சிறந்த விஷ்ணு ஆல யம். இது பல்லவர்களுள் பிரபலமான முதலாம் பரமேஸ்வரவர்மனுல் 7-வது நூற்றுண்டில் கட் டப்பட்டது. இது முன்னே சிவன் கோயிலாயி ருந்ததை விஷ்ணு கோவிலாக மாற்றப்பட்டதென்

று அபிப்பிராயப்படுகிறார்கள். இது வாஸ்தவமாயிருந்தால் 12-வது நூற்றாண்டுக்கு முந்தி நடந்திருக்கவேண்டும். ஏகாம்பரநாதர் கோவிலுக்கு 180-கெஜதூரத்தில் கோயில் பிரதமகோபுரவாயிலுக்கெதிரில் ஜைநரால் கட்டப்பட்ட மண்டபம் ஒன்றுண்டு. அதிலிருக்கும் கட்டடங்களும் தூண் வரிசைகளும், இந்துக்களுடைய சித்திரங்களாயிருப்பதால் அது ஒரு இந்து கோவிலை இடித்துக் கட்டியதாக நினைக்கவிடமாகிறது.

வேகவதியின் வலக்கரையில் பள்ளிபாளையத்திற்கு அருகிலிருப்பது திருப்பருத்திகுன்றம். இதற்கு ஜயின கஞ்சியென்று ஒரு வழக்கப்பேருண்டு. இது தண்ணீர் தொட்டிக்கட்டடத்திற் கெதிரிலுள்ளது. ஜெயினர்கள் 10-வது நூற்றாண்டில் சங்கராசாரியரால் தோல்வியடைந்தபின் இங்கே குடியேறியிருக்கலாம். 2000 வருஷகாலமாயிருப்பதாகச் சொல்லப்பட்ட ஒருகோவில் இந்தக் கிராமத்திலிருக்கிறது. இந்தக்கோவிலில் புக்கராயனால் 1387-1388 வருஷங்களில் எழுதப்பட்ட சிலாசாசனமிருக்கிறது. இக்கோவில் குருக்கள் சந்ததியாரும் தர்மகர்த்தா சந்ததியாரும் இவ்வூரிலிருக்கிறார்கள்.

---

## இரண்டாவது அத்தியாயம்.

### புராணவரலாறு.

காஞ்சிபுரத்தில் அனேக கோவில்களிருக்கின்றன. ஒவ்வொரு கோவிலிற்கும் ஒவ்வொரு பூர்வகதையிருக்கிறது. ஆதலால் காஞ்சியைப் பற்றி அனேக புராணகதைகளுண்டு. இவை ஸ்தல புராணங்களிலும் இன்னும் மற்றக் கிரந்தங்களிலும் காணப்படும்.

எப்பொழுது தர்மம் குறைந்து அதர்மம் தலையெடுக்கிறதோ அப்பொழுது பரமபதி பூமியில் அவதரிக்கிறார். இப்படி அவதரித்த இடங்களுக்குள் காஞ்சிபுரம் ஒன்று.

முன்னொரு காலத்தில் பரமசிவன் கைலாயத்தில் யோகத்திலிருக்கும்பொழுது, பார்வதிதேவி விளையாட்டாய் அவருடைய கண்களை மூடிக்கொண்டாள். அப்பொழுது சூரிய சந்திரர்களாகிய இரண்டு கண்களும் மூடப்பட்டதனால், உலகமெல்லாம் அனேக யுகங்கள் இருள் மூடி விருத்தியடையாமலிருந்தன. அனேக கஷ்டங்களும் உலகத்தோருக்கு உண்டாயின இதனால் பார்வதிதேவியாருக்குப் பாபகஷ்ட முண்டாயின. இப்பாப விமோசன மடைவதற்காகப் பார்வதி பரமசிவத்தைப் பிரார்த்தித்தபொழுது, தேவிக்கு மனமிரங்கி அவளுடைய இஷ்டம் பூர்த்தியாகும்படி காஞ்சிக்கு அனுப்பினர். அப்படியே அம்பி

கையும் மாமரத்தினடியில் போந்து இஷ்டசித்தி
யடையுவண்ணந் தவஞ்செய்ய எண்ணங்கொண்
டாள். அந்த எண்ணத்துடன் காஞ்சி வனத்திற்
குள் பார்வதிதேவி வந்து கம்பா நதிக்கரையில்
மாமரத்தடியில் பஞ்சாக்கினி மத்தியில் உத்திர
நட்சத்திர நாள் வரையில் கொடுந்தவத்தைச் செய்
தபொழுது, மனம் சுத்தப்பட்டுக கௌரி, தேவி
வடிவத்தையடைந்தாள். அந்தத் தாவளியமாய்
பிரகாசிக்கிற லிங்கத்தைப் பூஜைசெய்யக்கூடாமை
யால் அவள் அந்த நதியிலிருந்து ஒரு கைம்மண்
ணைப்பிடித்து லிங்கம்போல் செய்து தன்மடியில
வைத்துப் பூஜை செய்யத்தொடங்கினாள். இவளை
பரிசோதிக்க வெண்ணிய பரமசிவன் கங்கைமுத
லிய நதிகளைக்கம்பாநதியில் வெள்ளமாகப் பிரவே
சிக்க ஆக்ஞாபித்தார். வருவதைக்கண்டு அச்ச
முற்ற தேவியார் அப்பொழுது லிங்கம் தன்னை
விட்டு நழுவாமலிருக்கவேண்டி அவ்விலிங்கத்தை
நன்றாக ஆலிங்கனம் செய்துகொண்டாள்.

ஈசுவரனுக்கு மிக்க சந்தோஷம்வந்து அந்த
லிங்கத்தில அவதாரம் செய்து பார்வதிதேவியின்
விருப்பத்தின்படி, வரம்புமீறி வந்தகங்கை முத
லிய நதிகளைத் தண்டிக்கும்படி அனுமதி கொடுத்
தார். உடனே அந்த நதிகள் வறண்டு போயின.
உடனே பார்வதியும் ஈசுவரனும் ஒன்றுகூடி நதி
யைக்கடந்து காஞ்சிக்குவந்தார்கள். பிறகு ஜனங்
களுக்கு நன்மை யுண்டாக்கும் பொருட்டு ஜகத்கு

வரியும் அந்தப்புண்ணிய நதிகளைமறுபடி காஞ்சிபிலுள்ள நதிகளிலும், தீர்த்தங்களிலும் பிரவேசிக்கும்படி ஆக்ஞாபித்தாள். பிறகு பிரம்மாதிதேவர்களது பிரார்த்தனையின்படி காஞ்சிபுரத்தில் ஈசுவரனுக்கும் தேவிக்கும் உத்திர நட்சத்திரத்தில் கலியாணம் நடந்தது. பிரம்மா, விஷ்ணு முதலியவர்களும் தவஞ்செய்து இஷ்ட சித்திபெற்றார்கள். மகாவிஷ்ணுவும் ஆமைவடிவங் கொண்டு சித்தியடைந்ததினால், ஈசுவரருக்குக் கச்சபேசுவரர் என்றுபெயர் வந்தது.

பிரம்மதேவர் ஜனங்களுக்கு நன்மை யுண்டாக ஒரு அசுவமேதயாகஞ் செய்யப் பிரயத்தனப்பட்டபோது தும்புருநாதர் கானத்தைக் கேட்டு மகிழ்ந்து கொண்டிருந்த சரஸ்வதியை விட்டுவிட்டு மற்றப்பத்தினிகளாகிய காயத்ரி, சாவித்ரி என்னும் இவர்களுடன் காஞ்சிக்கு வந்தார். சரஸ்வதிதேவி இந்த யாகத்திற்குப் பங்கம் செய்ய எண்ணி மிக்க கோபங்கொண்டு பாலாற்றில் வெள்ளமாகி யாகசாலையைக்கெடுக்க வந்தாள். இதையறிந்து பிரம்மதேவர் ஈசுவரனைப்பிரார்த்தித்த பொழுது அவர் விஷ்ணுதேவருக்கு இந்த நதியின் வழியை வடக்கே திருப்ப ஆக்ஞாபித்தார். அவர் அது போற்செய்யாமையால் அந்த நதிமுன் போலவேவர, மறுபடியும் பிரம்மதேவர் உருத்திரரைப்பிரார்த்திக்க, அவர் விஷ்ணுதேவரை நிர்வாணமாக அந்த நதியணையில் கிடக்கும்படி சபிக்க,

அப்படியே இன்னும் அந்த யாகசாலைக்குச் சமீபத்தில் அவர் அப்படியே நிர்வாணமாய்ப்பள்ளிக்கொண்டிருக்கிறார். சரஸ்வதிதேவியும் லஜ்ஜைப்பட்டு யாகத்துக்குத்தானும் வந்திருந்து யாகத்தைப்பூர்த்திசெய்தாள்.

பிரம்மதேவர் யாகத்தினால் முக்கோடி புண்ணிய தீர்த்தங்களும் வர அந்த ஸர்வதீர்த்தத்தில் பிரம்மதேவரும் ஸ்நாநம் செய்தார் செய்தவர்களுக்கு அசுவமேதயாகஞ் செய்த பலனுண்டாம். இது இருபத்தினான்கு சதுர்யுகங்களுக்கு முன் நடந்தது.

பராசக்தியே காமாட்சியம்மன். பிரம்மா, விஷ்ணு ருத்திரர் அவ்வம்மை கண்ணிலிருந்து உண்டானதால், இம்மூவருக்கும் அவளே தாயாரென்று சொல்லப்படுகிறார். அஸ்த நக்ஷத்திரத்தில் பிரம்மதேவர் ஒரு யாகம் செய்யும்பொழுது ஜனார்த்தனர் மிகவும் சந்தோஷப்பட்டு அக்கினிக்குண்டத்திலிருந்து கிளம்பினார்.

இவர் புண்ணிய கோடீசுவரருக்கு பூஜை நடத்திக்கொண்டு வருநாளில் தினந்தோறும் பூஜைக்கு ஒரு யானை புஷ்பங்கொண்டு வருவது வழக்கம். ஒருநாள் தாமரைத்தடாகத்தில் புஷ்பத்திற்காகப்போனபொழுது, ஒரு முதலை யானையின் காலைப் பிடித்துக்கொண்டது. அது ஆதிமூலமே என்று பிரார்த்தித்தபொழுது, விஷ

னு, தான் ஆதிமூல பல்லவேயென்று நினைத்தார். அப்பொழுது சிவபெருமான் விஷ்ணுவைப்பார்த்து உன்னைத்தான் பிரார்த்திக்கிறது என்று சொல்ல அப்படியே விஷ்ணுபகவான் தடாகத்திற்கு வந்து சக்ராயுதத்தால் முதலையைக்கொன்றார். அந்த யானைக்கு ஒரு கால் போய்விட்டதனால் அது கல்லாக கரிகிரி என்று பெயரிடப்பட்டது. பரமசிவன் விஷ்ணுவைக் கரிகிரி வரதர் என்று நாமங்கொடுத்து புண்ணியகோடி விமானமும் அளித்தார். அதுமுதல் மகாவிஷ்ணுவரதராகி, தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் வரங்கொடுப்பவரென்று பெயர் கொண்டனர். இவ்வாறு அனேக புராணக்கதைகளுண்டு.

---

## மூன்றாவது அத்தியாயம்.

காஞ்சிபுரத்தைக்குறித்துச் சொல்லும் புராணகதைகளைவிட்டுச் சரித்திரங்களைக்குறித்து விசாரிப்போம். காஞ்சிபுரத்தைக் குறித்துச்சொல்லும் புராணகதைகளெல்லாம் அதன் பெயர் போன புராதினத்தைக் காட்டுகின்றன. கி. மு 261-222 ம் வருஷத்தில் அரசாண்ட அசோகாவின் அரசாக்ஷியில் முதல் தடவையாக இதனுடைய புராதினத்தைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அசோகன் காஞ்சிபுரத்திலும் சித்த பூரியில் பௌத்தமதஸ்தூபி கட்டினான். இவ்விரண்டு

நகரங்களும் அசோகாவின் இராஜாங்கத்திற்குத் தென்கோடி எல்லையாக விருந்தன. காஞ்சிபுரமானது அப்போது பௌத்த மதராஜாங்கத்திற்கு முக்யஸ்தானமாயிருந்தது. சில நூற்றாண்டுவரையில் இது பௌத்த ராஜாங்கத்திற்கு மத்திஸ்தானமாயிருந்தது. கிறிஸ்து பிறப்பதற்கு ஒரு நூற்றாண்டிற்கு முந்தியே ரோம்-தேசத்து புத்தகங்களில் அனேக இடங்களில் இந்த நகரத்தைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. புனல் நாட்டுக்கு வடக்கேயுள்ள முக்ய பட்டணமாயிருந்தது. இது சோழ அரசர்களுக்கும் முக்கியபட்டணமாக விருந்தது. ஓர் சோழ அரசன் இவ்விடத்தில் பௌத்த மதகோவில் ஒன்று கட்டினான். அருவணாட்டில் வசித்தவர்கள் குறும்பர் என்னும் சாதியார். அசோகாவின் இராஜ்ஜியம் தாழ்ந்த நிலைமையடைந்த பிறகு ஆந்திர அரசர்கள் தங்கள் பராக்கிரமத்தை நிலை நாட்டி சிலகாலம் பாடலிபுரத்தைத் தங்கள் வசம் வைத்திருந்தார்கள். காஞ்சிபுரத்திற்குத் தெற்கே மட்டும் எல்லையாக இராஜாங்க முடைத்தாயிருந்த சோழ அரசர்கள் அப்போது வடக்கே படை எடுக்க ஆரம்பித்து காஞ்சிபுரத்தை ஜெயித்தார்கள். இந்த நகரமானது சுமார் மூன்று நூற்றாண்டுவரையில் இவர்கள் சுவாதீனத்திலிருந்தது. ஆதிசோழ அரசர்களில் மிகவும் பராக்கிரம முடைத்தாயிருந்தவர்களில் கரிகாலச்சோழனென்பவன் ஒருவன். இவன்

கி. பி 50 - 95ம் வருடத்தில் அரசாண்டதாகத்
தெரிகிறது. இவன் மிகவும் இளமையாயிருந்த
போது சிம்மாசனம் ஏறினான். இவன் சிறுவய
தாயிருந்தபோது ஆரியன் என்பவன் இவனு
டைய சிம்மாசனத்தை அபகரித்துக் கொண்டு
காஞ்சிபுரத்தில் அரசாண்டான். ஆனால் பிறகு
கரிகாலச்சோழனால் சிம்மாசனம் இழக்கப்பெற்
றான். அப்போது காஞ்சிபுரமானது சோழராஜ்
தானியோடு சேர்க்கப்பட்டது. கரிகாலச்சோ
ழன் அரசாட்சியில் சோழ ராஜ்ஜியம் வடக்கே
விஸ்தீர்ணிக்கப்பட்டிருந்தது. காஞ்சிபுரம் விஸ்தீ
ர்ணிக்கப்பட்டது. காவேரி நதியில் கிடைத்த
இரண்டு மூன்று நூற்றாண்டு நாணயங்களால்
ரோமதேசத்திற்கும் தென்னிந்தியாவிற்கும் தீவி
ரமான வியாபாரம் ஆரம்பிக்கப்பட்டு அநேக நூற்
றாண்டு வரையில் கூட வியாபாரம் நடந்துவந்ததா
கத் தெரிகிறது. அடுத்த மூன்று நூற்றாண்டு
வரையில் தென்னிந்தியாவைப் பற்றி சரித்திர
மொன்றுந் தெரியவில்லை. காஞ்சிபுரம் மாத்தி
ரம் இப்போது பள்ளிகள் என்றும் வன்னியர்க
ளென்றும் சொல்லப்படும் ஆதிபல்லவர்களுக்கு
முக்கியபட்டணமாயிருந்தது. தற்காலம் கிடைக்
கும் முகாந்திரங்கள் அந்தகாலத்தில் கிடைக்காத
தினால் அப்போது பல்லவர்களின் நிலைமையைக்கு
றித்து வித்தியாசமான அபிப்பிராயங்கள் ஏற்ப
ட்டன. மிகவும் கற்றுணர்ந்த வேபரும் மற்றவர்

களும் பள்ளிகளை வெளிதேசத்திலிருந்து வந்தவர்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். வின்செண்ட் சிமித்து துரை அவர்கள் முதலில் இதே அபிப்பிராயமுடையவரா யிருந்தார்கள். ஆனால் பிறகு ஆதி இந்தியாவைக்குறித்து எழுதி யிருக்கும் புத்தகத்தில் இந்த அபிப்பிராயத்தை மாற்றி பள்ளிகளே பல்லவர்கள் என்று எழுதியிருக்கிறார். இந்த அபிப்பிராயத்தை டாக்டர் கிட்டில் துரை என்பவர் முதன்மையாகவே ஊகித்தார்.

பல்லவராஜ்ஜியம் என்னும் சிறுபுத்தகத்தில் பல்லவர்களின் உற்பத்தியைக்குறித்து விபரமாய்ச் சொல்லியிருப்பதுடன் பள்ளிகள் ஆதிபல்லவர்களேயன்றி வேறு அல்லவென ரூபித்திருக்கிறேன். டாக்டர் தர்ஸ்டன் துரையும் தென்னிந்தியாவிலுள்ள சாதிபேதத்தைக்குறித்து எழுதியிருக்கும் புத்தகத்தில் இதே அபிப்பிராயத்தைத் தழுவியிருக்கிறார். இந்தபுத்தகத்தின் 5-வது பாகத்தின் முதலில் பல்லவர்களைக்குறித்து விவரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. தற்காலம் பள்ளிகளிடமிருக்கும் பல்லவர்களைக்குறித்த அனேக அத்தாக்ஷிகளைக்காட்டி பள்ளிகளின் ஒழுக்கம் நடவடிக்கையை ஒத்திருக்கிறதென்று அவர் நிரூபிக்கிறார். மனுவென்பவர் சாதிகளைவகுத்துச் சொல்லும்போது பல்லவர்களைத் தாழ்ந்த நிலைமையடைந்த க்ஷத்திரியர் என்று சொல்லியிருக்கிறார். அதாவது பல்லவர்கள் தங்கள் ஒழுக்கம் ஆசாரத்

தினின்று ஆ[illegible]ரியிருக்கிறார்கள் என்பதாம். இது உண்மையே. ஏனென்றால் தென்னிந்தியாவுக்கு இராஜாங்கமதமாயிருந்த பௌத்தமதத்தினால் இவர்கள் இவ்வித வித்தியாசமான நிலைமையை யடைந்திருப்பதாகத்தெரிகிறது. இப்போதுதான் பல்லவர்கள் தங்கள் பராக்கிரமத்தை நிலைநாட்டினார்கள். 4-வது 5-வது நூற்றாண்டில் கல்வி ஆராய்ச்சி மிகவும் குறைவுபட்டிருந்தது. கல்வெட்டுகளுமொன்றுமில்லாததினால் அந்தகாலத்தின் நிலைமை இத்தன்மையதென்று தெரியவில்லை. மூன்று பிராக்கிருத கல்வெட்டுகளும், சில சமஸ்கிருத செப்பேடுகளும் 3, 4 - வது நூற்றாண்டில் பல்லவர்களின் சரித்திரம் இத்தன்மையதென்று ரூபிக்க ஏதுக்களாயிருக்கின்றன. மேற்கண்ட கல்வெட்டுகளால் 4 - வது நூற்றாண்டில் அரசாண்ட சிவஸ்கந்தவர்மன் காலத்திலும் இவனுக்குமுன்னிருந்த அரசன் காலத்திலும் தொண்டமண்டலம் பல்லவராஜ்யத்தைச் சேர்ந்திருந்ததாகத் தெரிகிறது பல்லவராஜ்யத்தின் விஸ்தீரணமானது தற்காலமிருக்கும் வட ஆற்காடு தென்னாற்காடு செங்கற்பட்டு திருச்சிராப்பள்ளியின் சில பாகங்கள் சேலம் ஜில்லா மைசூர் ராஜ்யத்தின் கிழக்குபாகம் தெற்கே பெங்களூர் வரையில் மேற்கே பல்லாரி, வடக்கே கிருஷ்ணா நதிவரையிலுள்ள தெலுங்கு இராஜ்யம் முழுவதும் பரவியிருந்தது. சிவஸ்கந்தவர்மன் அக்கினியாகம் அஸ்வமேதயாகம் முத

விய யாகங்களைச்செய்தான். இவற்றுள் அஸ்வ மேதயாகத்தை அநேகஇராஜ்ஜியங்களை ஜெயித்த பிறகு தான் செய்யக்கூடும்.

இதனால் சிவஸ்காந்தவர்மன் விசாலமான இராஜாங்கத்தை அரசாண்டதாகத் தெரிகிறது. காஞ்சிபுரத்திலிருந்த சில சிற்றரசர்களால் பல்ல வர்கள் காஞ்சிபுரத்திலிருந்து துரத்தப்பட்டுச்சில காலம் நெல்லூருக்கு அருகாமையில் வசித்திருந்த தாகத் தெரிகிறது. ஆதிகாலத்து பல்லவர்கள் பாரத்துவாஜ கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். பௌத்த மதத்தைச்சேர்ந்திருந்த ஒரு அரசன் தவிர மற்ற அரசர்களெல்லாம் விஷ்ணுபக்தர்க ளாக விருந்ததாக இந்த காலத்து அரசர்களின் பெயர்களினால் தெரிகிறது. இவர்களின் பெயர்க ளெல்லாம் விஷ்ணு சம்பந்தமுடையனவா யிருக் கின்றன. இதற்கு காரணம் அனேகமாய்த் திரு மழிசை ஆழ்வாரோடுகலந்திருக்கலாம். எப்போது எப்படி காஞ்சிபுரத்தை மறுபடியும் இவர்கள் கைப்பற்றினதாகத் தெரியவில்லை. ஆனால் கி. பி. 6-ம் நூற்றாண்டின் கடைசிகாலத்திற்கு முந்தியே காஞ்சிபுரத்தை இவர்கள் மறுபடியும் கைப்பற்றினதாக நன்றாய்த்தெரிகிறது. 5-ம் நூற் றாண்டில் பல்லவராஜ்ஜியம் தற்காலம் நெல்லூர் குண்டூர் அனேகமாய் சேட். ஜில்லாக்களின் விசே ஷபாகத்தை விஸ்திரண முடையதாக்கியதாகத் தெரிகிறது. 6-ம் நூற்றாண்டின் முதலில் பவண

30 JAN 1912

ஸியிலிருந்த கடம்பர்கள் பல்லவர்களுக்கு அனேக உபத்திரவங்கள் செய்தார்கள். இந்தவம்சத்தை ஸ்தாபித்த மயூரவர்மனென்பவன் பல்லவர்களையும் விஜயாகரத்தைச் சுற்றியிருந்த பாவனர்களையும் இம்சைசெய்தான். ஆனால் பல்லவ அரசன் சாதுரியமாய் மயூரவர்மனுக்கு விசேஷதிரவியம் கொடுத்து சமாதான உடன்படிக்கை யேற்படுத்திக்கொண்டான். ஷை மயூரவர்மன் இறந்தபிறகு இவனுக்கும் பின் வந்தவர்களிடம் பல்லவர்கள் சமாதானமாயிருக்கவில்லையென்று தெரிகிறது. ஏனென்றால் இவனுக்குப்பின்வந்த மிரஜேஸ்வர்மனென்பவன்தான் பல்லவ அரசனைக்கொன்றதாகக் கெர்வித்து தன்னைப் புகழ்ந்துகொண்டதோடு ரவிவர்மனென்கிற இன்னொருவனும் பல்லவராஜனொருவனைத் தோல்வியடையச்செய்ததாகத் தெரிகிறது. கடம்பர்களால் பல்லவர்களுக்கு இவ்விதமாக அனேககஷ்டங்கள் நேரிட்டபிறகு உடனே இவர்களுக்கு இன்னொரு ஆபத்தும் சேர்ந்தது. மேற்கு சளுக்கிய தேசத்து முதலாம் புலிகேசன் என்னும் அரசன் சுமார் கி.பி 550-ம் வருஷத்தில் வாதாபி (பாதாமி) என்று மிடத்தில் தன் பராக்கிரமத்தை நிலைநாட்டி அடுத்த நாடுகளையும் காஞ்சிபுரம்வரையிலுள்ள நாடுகளையும் கைப்பற்றிக்கொண்டான். ஆனால் காஞ்சிபுரத்தில் பல்லவர்களோடு யுத்தஞ்செய்து பல்லவர்களைச் செயித்து காஞ்சிபுரத்தைப்பிடித்துக்கொண்டு தன் படைகளை வி

ட்டு அநேகநாள் அவ்விடத்தில் கொள்ளையடித்தல் முதலிய அனேக விதமான கொடூரமான செய்கைகளைச் செய்வித்தான். கடைசியாக நகரமானது கொளுத்தப்பட்டது. 18-ம் நூற்றாண்டு வரையில் இந்நகரத்திற்கு நடக்கத்தகாத கொடூரமானசெய்கைகள் இப்போது முதல்தடவையாகச் செய்யப்பட்டன. புலிகேசன் கொள்ளையடித்ததினால் தெற்கே தங்கள் பராக்கிரமத்தைக்குறித்து இரண்டு நூற்றாண்டுவரையில் இந்த இரண்டு ராஜவம்சத்தாருக்கும் விடாத சச்சரவு நேரிட்டதாகத் தெரிகிறது. இந்தக்காலத்தில் மிகவும் பராக்கிரமமுள்ளவர்களும் பல்லவர்களுமே. அப்போது சோழ அரசர்களுக்கு யாதொருவலிமையுமில்லை. பாண்டியர்கள் சிங்களியர்களுடன் நடந்த சச்சரவினால் தாங்கள் ஜீவிப்பதே மிகவும் கஷ்டமாயிருந்தது. சோழ அரசர்கள் கிழக்கே நடந்தவிஷயங்களை சிறிதும் கவனிக்கவில்லை. இவ்விதமாக பல்லவர்களுக்கும் சளுக்கியர்களுக்கும் தங்கள் பராக்கிரமத்தைக் குறித்து நீடித்தசண்டையுண்டாயிற்று.

பல்லவர்கள் தோல்வியடைந்தாலும் சளுக்கியர்கள் ராஷ்டிரகூட வம்சத்தாரால் தாழ்ந்த நிலைமையடையும்படி நேரிட்டது. கி. பி 550-ம் வருடத்தில் பல்லவர்களின் சரித்திரத்தைக்குறித்து சொல்லவதற்கு அனேக அத்தாக்ஷிகளிருக்கின்றன. இந்தக் காலத்தில் அனேக கோவில்க

லிலுள்ள கல்வெட்டுகளினால் பல்லவர்கள் சளுக்கியர்களுடன் சண்டை செய்ததாகவும் அனேக கட்டடங்களைக் கட்டினதாகவும் தெரிகிறது. கி. பி. 550-ம் வருடத்தின் பிறகு அடிக்கடி நடக்கும் சண்டை நின்றுவிட்டது. எங்கும் யாதொரு குழப்பமுமில்லாமல் ஜனங்கள் சௌர்யமாயிருந்தார்கள். அப்போது பல்லவர்கள் கோவில்களைக் கட்டினார்கள் தங்கள் இராஜ்ஜியத்தை விஸ்தீர்ணப் படுத்தினார்கள். பிறகுவந்த பல்லவர்களுள் சிம்ம விஷ்ணு அல்லது ராஜசிம்மேஸ்வரவர்மன் என்பவன் காஞ்சிபுரத்தில் முதல்தடவையாக ராஜசிம்மேஸ்வரம் அல்லது கைலாசநாதர் கோவில் என்னும் ஓர் கோவிலைக்கட்டினான். இவன் செய்திருக்கும் கல்வெட்டுகளில் சேரன் பாண்டியன் முதலிய அரசர்களை இவன் ஜெயித்ததாக எழுதியிருக்கிறது. இவன் குமாரன் முதல் அபேந்திரவர்மன் என்பவன். மஹேந்திர பரமேஸ்வரன் கோவிலைக்கட்டினான். மஹேந்திரவர்மனுக்குப் பிற்கால அரசாக்ஷியில் சளுக்கிய அரசனான கீர்த்திவர்மன் குமாரனான புலகேசனால் படையெடுக்கப்பட்டது. புலகேசன் காஞ்சிபுரத்தில் பிரவேசித்ததினால் மஹேந்திரவர்மன் கோட்டைக்குள் ஒளித்துக்கொள்ளும்படி நேரிட்டது. காஞ்சிபுரத்திற்கருகாமையிலுள்ள பாலிலூர் அல்லது புலிலூரென்னுமிடத்தில் புலகேசனை ஜெயித்ததாக மஹேந்திரன் சொல்லுகிறான். மஹேந்திரவர்ம

னின் துர் அதிஷ்டம் இவன் குமாரன் நரசிம்மவர்மனால் நிவர்த்திக்கப்பட்டது. நரசிம்மவர்மன் சேரனையும் சோழனையும் பாண்டியனையும் தோல்வியடையச்செய்தான். நரசிம்மவர்மன் தன்வலிமை தெரிந்துக்கொண்டு புலகேசனோடு சண்டைசெய்ய சளுக்கியராஜ்ஜியத்தில் பிரவேசித்து ஜெயமடைந்தான். கூடலூர் ஜில்லாவில் மணிமங்கலா, சூரமாரா, பரியாலாவென்னுமிடங்களில் அடுத்த மூன்று யுத்தங்களில் புலகேசன் தோல்வியடைந்தான். கடைசியாக கி. பி. 634-ம் ஞூபல் சளுக்கிய முக்ய பட்டணமான வாதாபியானது கைப்பற்றிக்கொள்ளப்பட்டது. சுமார் 30 வருஷம்வரையில் வாதாபியானது பல்லவர்களின் சுவாதீனத்திலிருந்ததாகத்தெரிகிறது. இவ்விதமாக 30 வருஷம் எங்கும் சண்டையில்லாமல் அமைதியாயிருந்தது. பல்லவர்கள் அப்போது குளங்களைவெட்டியும் கால்வாய்களைத்தோண்டியும் ஜலபாய்ச்சலுக்கு ஆதாரமான பல வேலைகளைச்செய்தார்கள். நரசிம்மவர்மன் குமாரன் இரண்டாவது மஹேந்திரவர்மன் என்பவன் தென்னிந்தியாவில் முதன்மையாக குளங்களைவெட்டினான். இவன் மஹேந்திரவரத்திலும் இன்னும் மற்றவிடங்களிலும் கட்டியிருக்கும் தடாகங்களை மஹேந்திரவர்மன் புகழைக்காட்டுஞ் சாசனங்களாகவிருக்கின்றன.

7-ம் நூற்றாண்டின் முதல்பாகத்தில் பல்லவர்களின் ராஜ்ஜியவிஸ்தீரணத்தைப்பற்றி சீனதே

சத்திவழிப்பிரயாணியாகிய ஹியூன் திஸாங்கு விவரமாய்ச் சொல்லுகிறார். இவர் கி. பி. 639-ம்வருஷல் காஞ்சிபுரத்திற்குவந்து ஒருமாதம்வரையில் தங்கியிருந்தார். இவருடைய தினசரிபுத்தகத்தில் காஞ்சிபுரத்தைக் கீன்சிபுலோவென்று எழுதியிருக்கிறார். காஞ்சிபுரம் திராவிடதேசத்திற்குத் தலைமைப்பட்டணமென்றும் எழுதியிருக்கிறார். திராவிடதேசமானது கிழக்குசமுத்திரம் மேற்குசமுத்திரத்திற்குமத்தியில் மைசூர்மாகாணத்தில் காத தூரவழியாய் கர்தபூர் திருப்பதி முதல் நேராக பழவெற்காடு ஏரிவரையிலும் கள்ளிக்கோட்டையிலிருந்து காவேரிமுகத்துவாரம்வரையிலும் விஸ்தீர்ணமுள்ளதாயிருந்ததாகத் தெரிவிக்கிறார். இவர் அபிப்பிராயத்தின்படி திராவிடதேசமானது 1000 மயில் சுற்றளவும் தலைமைநகரமானது 5 மயில் சுற்று விஸ்தீர்ணமுள்ளதாகவும்தெரிகிறது. கி.பி. 670-ல் மகேந்திரவர்மனுக்கும் பிறகு அவன் குமாரன் முதல் பரமேஸ்வரவர்மன் சிம்மாசனமேறினான். விக்ரமாதித்தன் சளுக்கிய தலைமை நகரமாகிய வாதாபியைக் கைப்பற்றிக்கொண்டும் சண்டை ஆரம்பித்து மீள காஞ்சிபுரத்தைப் பிடித்துக்கொண்டான். ஆனால் பரமேஸ்வரன் பூவரநல்லூருக்கருகாமையில் விக்ரமாதித்தனை தோல்விபடையச்செய்து ஓடிப்போகும்படிச்செய்தான். பரமேஸ்வரவர்மனுக்கும் விக்ரமாதித்தனுக்கும் நடந்த சண்டையில் இரு

வரும் மாறிமாறி தோல்வியடைந்தார்கள். ஆனால் சளுக்கியர்களால் பல்லவர்கள் படிப்படியாய்த் தெற்கேசெல்லும்படி நேரிட்டதாகத்தெரிகிறது. இந்தசண்டையில் இரண்டுகக்ஷியையும் சேர்ந்த போர்வீரர்கள் இரண்டாவது விக்ரமாதித்தனும் நந்திவர்மனுமேயாம். நந்திவர்மன் கடைசியாக கி. பி. 773-74-ம்௵ல் நடந்த சண்டையில் தோல்வியடைந்தபின் கொல்லப்பட்டான்.

விக்ரமாதித்தன் காஞ்சிபுரத்தில் பிரவேசித்து காஞ்சிபுரத்தைக் கைப்பற்றிக்கொண்டான். ஆனால் முன் அரசாண்டவரான முதல் புலகேசனைப்போல விக்ரமாதித்தன் நகரத்திற்கு யாதொரு தீங்குஞ்செய்யவில்லை. ராஜ சிம்மேஸ்வர ஆலயத்தில் விக்ரமாதித்தனைப்பற்றியுள்ள கல்வெட்டுகளால் விக்ரமாதித்தன் காஞ்சிபுரத்தின் பெருமையின்பொருட்டே விசேஷ திரவியம் செலவு செய்ததாகத்தெரிகிறது. பிறகு காஞ்சிபுரத்தை அரசாண்ட சில அரசர்கள் பல்லவர்களல்ல. இவர்களோடு சமாதானமாயிருந்த கங்கேய அரசர்கள் சிலகாலம் இந்த அரசர்கள் கங்கா கொடிகளை உபயோகித்தார்கள். ஆனால் நிருபதுங்கவர்மன் இவைகளைத்தள்ளி பல்லவர்களின் கொடிகளை உபயோகித்தான். சுமார் கி. பி. 760-ம்௵ சளுக்கியர்கள் ராஷ்டிரகூட்டத்தாரால் தோல்வியடைந்தார்கள். காஞ்சிபுரத்திற்கும் வாதாபிக்குமிருந்த சண்டை பிறகுவந்த இராஜவம்சத்தாருக்

கும் நேர்ந்ததாகத்தெரிகிறது. நந்திவர்மனுக்குப் பிறகு சிம்மாசனமேறினவன் நரசிம்மவர்மன். கி. பி. 804-ம்வருஷம் தந்திகனென்னும் தந்திதுர்க்கன் ராஷ்டிர கூட்டத்தாரை தோல்வியடையச்செய்தான். ஆகிலும், மறுபடியும் ஷை ராஷ்டர கூட்டத்தாரால் தந்திகன் தோல்வியடையப்பட்டு தெற்கே ஓடிப்போய்விட்டான். தந்திகனுடைய குமாரன் ராஷ்டர்கூட்ட அரசியைக் கலியாணம்செய்துக்கொண்டான். இவ்வித ஏற்பாட்டினால் கொஞ்சகாலம்வரையிலும் சமாதானமுண்டாயிருக்க ஏதுவிருந்தது. ஆனால் சண்டையானது ஆரம்பித்து ராஷ்டர்கூட்ட அரசன் கி. பி. 866-ம்வருஷம் நந்திவர்மனைத் தோல்வியடையச்செய்தான்

இந்த ராஷ்டரகூட்ட அரசன் தென்னிந்தியாவில் சமணமதத்தை ஆதரித்தான். இவனுடைய அரசாக்ஷியில் இவன் வலிமைவிசேஷப்பட்டிருந்தது. நந்திகன் அரசாக்ஷியில் பல்லவர்களுக்கு மைலாப்பூர்கிடைத்தது. அப்போது திருவல்லிக்கேணியில் ஓர்கோவில் கட்டப்பட்டது. நந்திவர்மனுடைய குமாரன் நிருபதுங்கவர்மன். இவன்காலத்தில் பல்லவராச்சியம்விஸ்தீர்ணக்குறைவடைந்து தென்னாற்காடு செங்கற்பட்டு திருச்சிராப்பள்ளி இவைகள் எல்லையாகவிருந்தன. அந்த அரசன் தான் நாம் மேற்சொன்னபடி கங்காகொடிகளை நிறுத்திவிட்டுப் பல்லவகொடிகளை உபயோகித்தான். நிருபதுங்கன் குமாரன் அபரா

ஜிதன். இவன் கங்கா பல்லவ வம்சத்தாரில் கடைசியாய் அரசாண்டவன். இவன்தான் 9-ம் நூற்றாண்டின் கடைசியில் சோழ அரசனாகிய முதலாதித்யனால் அரசாக்ஷி ஜெயிக்கப்பட்டு கொல்லப்பட்டான். காஞ்சீபுரமானது ஆதித்யன் ராச்சியத்தில் சேர்க்கப்பட்டது. இதுமுதற்கொண்டு காஞ்சிபுரம் எந்த ராஜாங்கத்திற்கும் முக்கியபட்டணமாயிருந்ததில்லை. ஆனால் அரசசந்ததியார் தங்கியிருக்க இடமாயிருந்தது. பிறகுவந்த பல்லவர்கள் மற்ற அரசர்களுக்குக் கப்பங்கட்டிக்கொண்டிருந்தார்கள். குணபாரனென்ற பல்லவ அரசன் சோழதேசத்தில் அரசாண்டான். இவன் அனேகமாய்க் காஞ்சீபுரத்தில் சோழ அரசர்களுக்கு இராஜப்பிரதிநிதியாயிருந்தானும். 7-வது 8-வது நூற்றாண்டில் சோழ அரசர்களுக்கு இழந்துபோன பராக்கிரமம் மறுபடியும் உண்டாயிற்று. பல்லவர்கள் தாழ்ந்த நிலைமையடைந்ததும் ராஷ்டரகூடத்தாருக்கு முக்கியபட்டணமான வாதாபி காஞ்சிபுரத்திலிருந்து அதிகதூரமாயிருந்ததும் ஆகிய இந்த சந்தர்ப்பங்கள் சோழ அரசர்களுக்கு அனுகூலத்தை யுண்டாக்கின.

பல்லவராஜியத்தைச் சேர்த்துக்கொண்ட சோழ அரசர்களில் ஆதித்யன் முதன்மையானவன். இவனுக்குப் பிறகுவந்தவன் இவன் குமாரன் முதல் பராந்தகன் (900-960). இவன் அரசாக்ஷியில் சமணர்கள் வலிமையிலும் பராக்கிரமத்தி

னும் விசேஷித்திருந்தார்கள். பராந்தகன் குமாரன் இராஜாதித்தன் காலத்தில் சண்டை ஆரம்பித்து இவன் ரூதுபார்க்கமாய் கங்கா சிற்றரசனால் கொலையுண்டான். ராஷ்டகூட்ட அரசர்களுக்குக் காஞ்சீபுரம் கொடுக்கப்பட்டது. கி. பி. 985-ம் ஆண்டில் சோழதேசத்தில் சண்டையுண்டாயிற்று. ராஜராஜ தேவனென்பவன் சிம்மாசனமேறித் தென்னிந்தியாவில் தன் பராக்கிரமத்தை நிலைநாட்டினன். கி. பி. 1000-ல் மேற்கேயுள்ள சளுக்கிய அரசனை ஜெயித்து அவனுடைய ராச்சியத்தை சேர்த்துகொண்டான். கி. பி. 990-ல் காஞ்சிபுரம் ராஜராஜாவினால் மறுபடியும் கைப்பற்றிக்கொள்ளப்பட்டது. ராஜராஜ அரசன் பல்லவராஜ்யமுழுவதும் தன் அதிகாரத்தின்கீழ் வைத்திருந்தான். இவன் அரசாக்ஷியில் சோழ அரசன் அதிகாரம் சென்னை மாகாணத்திலும் இலங்கையிலும் அனேகமாய் மைசூர் முழுமையும் பரவியிருந்தது. இவன் பர்மாதேசத்தின்மேல் படையெடுத்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தன் தலைமை நகரான தஞ்சாவூரில் பெயர்போன பிஹதீஸ்வர ஆலயத்தைக்கட்டினன். சைவனாகியிருந்தும் பௌத்தமதத்தை ஆதரித்தான். நாகப்பட்டினத்தில் பௌத்தகோவிலையும் கட்டடங்களையுங்கட்டி அவ்விடத்தில் பௌத்த சிற்றரசை ஆதரித்தான். கி. பி. 1018-ம் ஆண்டில் இராஜேந்திர சோழன் சிம்மாசனமேறி தன் தகப்பனுடைய

போல் அநேகவிடங்களில் ஜெயமடைந்தான். சுமார் கி. பி. 1042-ம்ஹுல் இவனுக்குப்பிறகு இவன் குமாரன் ராஜாதிராஜன் சிம்மாசனமேறினான். பின் அஸ்வமேதயாகமுஞ்செய்தான். சளுக்கிய அரசனுக்கும் இவனுக்கும் சண்டையுண்டாயிற்று. இவன் சளுக்கிய தேசத்தின்வழியாய்ப் போனபோது தான் கைப்பற்றிய சமணக்கோவில்களையெல்லாம் கொளுத்தினான். கி. பி. 1059-ம் ஹுல் குப்பமென்னுமிடத்தில் சளுக்கியனால் கொலையுண்டான். பிறகு இரண்டாவது இராஜேந்திரன் எனும் வலிமையுடைய அரசன் கி.பி. 1070-ம் ஹுல் சிம்மாசனமேறினான்.

கி. பி. 1070-1075-ஹுல் சளுக்கியராஜனை அபஜெயப்படுத்தித் தன் அரசாட்சியின் 5-வது வருஷத்தில் குலோத்துங்கனென்னும் பெயரை வகித்துக்கொண்டான். காவேரிநதிக்கரையில் தான்முடி சூட்டிக்கொண்டு பாண்டியராஜனை தனக்கு அடிமைப்படுத்திக் கொண்டான். காஞ்சிபுரத்திலுள்ள ராஜசிம்மேஸ்வரர்கோவிலைச் சாத்திவிட்டு அதன் சொத்துக்களை அருகாமையிலிருந்த அனயபதங்ககோவிலுக்குக் கொண்டுபோய்விட்டான். இந்தகாலத்தில் காஞ்சிபுரம் சோழராஜாங்கத்திற்கு ஓர்பாகமாயிருந்தது. அநேக கோவில்களுடையதினாலும், திவ்வியதீர்த்தங்களை யுடையதினாலும் புராதீனமாய்அளவிலாப் பெருமைவிளங்கியிருப்பதினாலும் காஞ்சிபுரமானது அரசர்களுக்கும்

பிராமணர்களுக்கும் மற்ற யாத்திரைவாசிகளுக்கும் தங்குமிடமாயிருந்தது. ஆகையால் இப்போதும் யாத்திரவாசிகள் தங்குவதற்கு அனுகூலமாயிருக்கிறது. இது தஞ்சாவூருக்கு அடுத்ததாயுமிருக்கிறது. மூன்றாவது குலோத்துங்கன் வலிமைதங்கிய சோழ அரசர்களில் கடைசியானவன். இவனுக்குப்பிறகு 2-வது இராஜராஜன் சிம்மாசனமேறினான். இவன் காலத்தில் இச்சோழ அரசர்களின் வலிமை மிகவும் குறைவு பட்டிருந்தது. பின் சொல்லப்பட்ட அரசன் 1222-ம் ௵ல் சிம்மாசனமேறி சில காலம்வரையில் காஞ்சிபுரத்தை முக்கியப்பட்டணமாக்கிக்கொண்டு 1223-ம் ௵ல் திருச்சினாப்பள்ளியை தன் ராச்சியத்தோடு சேர்த்துக்கொண்டான். ஹசலா அரசர்களில் வீரசிம்மன்காலத்தில் காஞ்சிபுரம் கிழக்கு எல்லையாயிருந்து பிறகு சேர்த்துக்கொள்ளப்பட்டது. சுமார் கி. பி. 1248-ம் ௵ல் வாரங்கலிலிருந்த காகதேயதேசத்து அரசர்கள் வசத்திலிருந்தது. கி. பி. 1248 முதல் 1310 வரையில் சோழ அரசர்களின் பார்வையின்கீழ் வாரங்கல் தேசத்திற்கு ஓர்பாகமாயிருந்தது. ஹ சலா காகதேய அரசர்களின் படை யெடுப்பினாலும் சோழ அரசர்களுக்குள் நடந்த சச்சரவினாலும் சோழ அரசரின் பராக்கிரமங்குறைய ஆரம்பித்துக் கடைசியாக கி.பி. 1310-ம் ௵ல் மாலிகாபரால் முற்றிலுங் குறைந்தது. பின் வாரங்கல் தேச

த்து அரசனுக்கு பயமுறுத்தப்பட்டது. கி. பி. 1312-ம் வருஷத்தில் காஞ்சிபுரத்தில் சோழஅரசர்களின் பார்வையின் கீழிருந்த ரவிவர்மனென்னும் கேரல அரசன் வேகவதி நதிக்கரையின்மேல் முடிசூட்டிக்கொண்டான். ஆனால் வாரங்கல்தேசத்து அரசர் பராக்கிரமங்கொண்டு ரவிவர்மனை துரத்திவிட்டு சேரவம்சத்தில் ஒருவனை இராஜப்பிரதிநிதியாக நியமித்தான். கி. பி. 1320-ம் வருஷத்தில் காகதேய ராஜ்யம் க்ஷீண திசையடைந்தது. பிறகு 50 வருஷம்வரையில் காஞ்சிபுரத்தைக்குறித்து ஒன்றும் தெரியவில்லை. இராஜசிம்மேஸ்வரர் கோவிலிலுள்ள கல்வெட்டில் கம்பன உடையாரும் தன் குமாரனும் காஞ்சிபுரத்தை கி. பி. 1366-ம் வருஷமுதல் 1369-ம் வருஷம் வரையில் அரசாண்டதாக எழுதப்பட்டிருக்கிறது. விஜயநகரத்து அரசனுடையசேனாதிபதியாயிருந்தகம்பணனென்பவனைத் தெற்கே மகம்மதிய பட்டணமாயிருந்தமதுரையை ஜெயிக்க அனுப்பப்பட்டது. வழியில் காஞ்சி புரத்தைக் கைப்பற்றிக் கொண்டு திருச்சினாப்பள்ளியில் புகாரயஇராஜியத்திற்கு இராஜப்பிரதிநிதியாயிருந்து தன் அரசை நிலைநாட்டினான். புகாரய ராஜ்யமானது கடைசியாக 1393-ம் வருஷத்தில் விஜயநகரத்தோடு சேர்க்கப்பட்டது. ஒசலா ராஜ்யம் தாழ்ந்தநிலைமை அடைந்தபோது பல்லாரி ஜில்லாவில் ஆஸ்பட் அருகில் தற்காலம் ஹம்பி என்று வழங்கும் விஜயநகரத்தில் ஓர் ராஜ்யம் ஏற்படுத்த

ப்பட்டு மூன்று நூற்றாண்டாக தென்னிந்தியாவில் அரசாக்ஷிக்கு முக்கியபட்டணமாயிருந்தது. கி. பி. 1393-ம்௵ல் விஜயநகரத்தின் அரசனான இரண்டாவது அரியசன் என்பவன் தெற்கே ஜெயித்து காஞ்சிபுரத்தைக் கைப்பற்றிக்கொண்டான். காஞ்சிபுரத்திலுள்ள காமாக்ஷி அம்மன் கோவிலிலும் திருப்பாசூர் கோவிலிலும் உள்ள கல்வெட்டுகளால் இந்த சங்கதி உண்மையென்று நன்றாய்த் தெரிகிறது இரண்டு கல்வெட்டுகளும் கி. பி. 1393-ம்௵ல் எழுதப்பட்டிருக்கின்றது.

இவ்விதமாக காஞ்சீபுரம் விஜயநகரஅரசர்களுக்கு முக்கியமானதாயும் இவர்கள் தங்குமிடமாயுமிருந்தது. அவ்வரசர்கள் காலத்தில் ஏகாம்பரநாதர் கோவிலும் காமாக்ஷி அம்மன் கோவிலும் தற்காலத்திலுள்ள பெருமையை அப்போதும் அடைந்திருந்தன.

கி. பி. 1481-ம்௵ பீஜபூரிலிருந்து வந்த மகமத்ஷாவினால் எடுக்கப்பட்ட படையெடுப்பு தவிர இரண்டு நூற்றாண்டு வரையில் காஞ்சிபுரம் விடாத அமைதியடைந்து யாத்திரவாசிகள் தங்குவதற்கு முக்கியஸ்தானமாயிருந்தது. கி. பி. 1481-ம்௵ல் மகமத்ஷா 9000 சேனைகளோடு காஞ்சிபுரத்தின் மேல் படையெடுத்து வந்தான். அப்போது கோவிலிலிருந்த பிராமணர்கள் அவர்களை எதிர்த்துத் தடுத்தார்கள். பிறகு இவன்

முற்றுகை செய்தான். சீக்கிரத்தில் பிராமணர்கள் ஓடிப்போகும்படி நேரிட்டது. மகமத்ஷா எல்லோரையும் கொலை செய்யும்படி உத்தரவு செய்து நகரத்தையும் கொள்ளையடித்தான். ஒரு வாரம் வரையிலிருந்து கிடைக்கக் கூடிய பொருள்களை சேகரித்துக் கொண்டு பிஜபூருக்கு போய்விட்டான். கி. பி. 1565-ம் ௵ தாலிகோட்டாவில் நடந்த சண்டையால் விஜயநகரம் சிதறப்பட்டது. அந்த குடும்பத்தின் ஓர் வகுப்பினர் சந்திரகிரிக்கு வந்து அக்காலமிருந்தார்கள். ஆயினும் இவர்களுக்கு காஞ்சிபுரம் அடிக்கடி தங்குமிடமாயிருந்தது. கர்னாடகத்திலும் மைசூரிலும் நடந்தயுத்த காலங்களில் காஞ்சிபுரத்திற்கு அநேக விபத்துகள் நேரிட்டன. காஞ்சிபுரம் மத்தியாகவும் செழிப்புள்ள பிரதேசமாகவிருந்ததினாலும் அவ்விடத்தில் கோவில் மிகவும் உறுதியாயிருந்ததினாலும் சாமான்கள் எளிதில் கிடைத்து யுத்தசாலைக்கு அனுப்ப அனுகூலமாயிருந்தபடியாலும் இந்த யுத்த காலங்களில் காஞ்சிபுரம் யுத்தத்திற்கு முக்கியஸ்தானமாயிருந்தது. இரண்டு கக்ஷிக்காரர்களாலும் ஏகாம்பரநாதர் கோயிலும் வரதராஜர் கோயிலும் ஆயுதசாலைகளாகவும் ஆஸ்பத்திரிகளாகவும் உபயோகிக்கப்பட்டன. இந்த யுத்தகாலங்களில் நகரத்திலிருந்த ஏழைக்குடிகளுக்கு அநேக உபத்திரவங்களும் ஆபத்துகளும் நேரிட்டன. கி. பி. 1752-ம் ௵ சாயினே என்னும் ஓர் பிரஞ்சு உத்

தியோகஸ்தர் காஞ்சீபுரத்தை மகமத் ஆலியிடமிருந்து கைப்பற்றிக்கொண்டு கொள்ளையிட்டான்.

லார்ட் கிளைவ் என்பவர் ஆற்காட்டை முற்றுகை செய்தபிறகு திருச்சிராப்பள்ளியை பாதுகாக்கப்போனபோது வழியில் காஞ்சீபுரத்தைக் கைப்பற்றிக்கொண்டார். சிலவருஷங்களுக்குப்பிறகு பிரான்சுகாரருக்கும் ஆங்கிலேயருக்கும் யுத்தம் நடந்தபோது கி. பி. 1761-ம்வருஷ கவுண்ட லாலி சர் அயர்கூட்டின் அஜாக்கிரதையைத் தெரிந்துகொண்டுவந்தவாசிக்குப்போவதாய் சர் அயர் கூட் எண்ணிக்கொண்டிருக்கையில் கவுண்ட லாலி திரும்பி காஞ்சீபுரத்தில் பிரவேசித்தான். அப்போது லெப்டினென்ட் சிஸ்லோம்என்பவன்சேனையுடன் ஏகாம்பரநாதர் கோயிலிலுள்ள யுத்த ஆயுத சாலையையும் ஆஸ்பத்திரியையும் பாதுகாத்துக்கொண்டிருந்தான். காஞ்சிபுரத்தில் ஆங்கிலேயர் தங்களுக்கு வேண்டிய சாமான்களைச்சேகரித்து வைத்திருப்பார்களென்றும் விசேஷ தானியங்களும் சாமான்களும் கிடைக்குமென்றும் லாலி எண்ணினன். ஆனால் காஞ்சிபுரத்தில் ஆங்கிலேயர் தானியம் சேகரித்து வைக்கவில்லை. ஏனென்றால் வேண்டியவரையில் சுலபமாய் இவர்களுக்கு தானியம் கிடைக்கும். லாலி தன்னுடன் பீரங்கிஒன்றும் கொண்டுவரவில்லை. ஆகையால் கோவிலுக்கு ஓர் ஆபத்தும் விளைவிக்காமல் போய்விட்டான். ஆனால் நகரத்திலிருந்த ஏழைகளையும் உதவியற்றிருந்த

ஜாங்களையும் கொள்ளையடித்து 2000 எருதுகளின்மேல் கொள்ளயடித்த பொருள்களை ஏற்றிக்கொண்டு போய்விட்டான். இந்த சங்கதி கர்னல் கூட்டுக்குத் தெரிந்து வருவதற்குள் லாலி நகரத்தை விட்டுப் போய்விட்டான்.

கி. பி. 1780-ம் வருஷத்தில் நடந்த இரண்டாவது மைசூர் சண்டையில் ஜெனரல் மன்ரோவினால் காஞ்சிபுரமானது கோட்டையாக கட்டப்பட்டது. பாலிலூரில் ஐதரால் காப்டன் பெயிலி அபஜயமடைந்தானென்று சங்கதி தெரிந்தவுடன் மன்ரோ தன்னிடமிருந்த குண்டுகளையும் யுதத சாமான்களையும் ஏகாம்பரநாதர் கோவில் குளத்தில் எறிந்து விட்டு செங்கற்பட்டுக்கு ஓடிப்போனான். பிறகு ஐதர் காஞ்சிபுரத்திற்கு வந்து கோவில்களை முற்றுகை செய்தான். இவனுடைய குண்டுகளினால் கோவில்களுக்கு நடந்த விபத்தைக் காட்ட இப்போதும் அடையாளங்களிருக்கின்றன. கர்நாடிக் நவாபினிடமிருந்து காஞ்சிபுரத்தை ஆங்கிலேயர் கைப்பற்றினார்கள். 19-ப் நூற்றாண்டின் முதலில் காஞ்சிபுரம் ஜில்லா கலெக்டர் தங்குவதற்கு முக்கியஸ்தானமாயிருந்தது. ஆனால் கி. பி. 1833-ம் வருஷம் காஞ்சிபுரம் ஜில்லா செங்கற்பட்டு ஜில்லாவோடு சேர்க்கப்பட்டு அது முதல் காஞ்சிபுரம் தாசில்தார் தங்குவதற்கு முக்கியஸ்தானமாயிருந்து வருகிறது.

# நான்காவது அத்தியாயம்.

## சமயநடைகள்.

தொன்று தொட்டுத் தென்னிந்தியாவில் நடைபெற்ற சகலசமயங்களுக்கும் முக்கியஸ்தானம் காஞ்சிபுரம். ஆதியில் இக்காஞ்சி புத்தமதத்திற்குத் தலைமையிடமாயிருந்தது. பிறகு சமண மதத்திற்கு முக்கிய ஸ்தானமாயிற்று. அதற்கு மேல் ஸ்ரீமத்சங்கராசாரியரால் அத்வைதமதம் பரவச் செய்யப்பட்டது. கடைசியாய் ஸ்ரீ ராமானுஜாசாரியாரும் அவர் சிஷ்யர்களும் விசிஷ்டாத்துவைதத்தை ஸ்தாபித்தார்கள். காஞ்சிபுரத்தில்கணக்கில்லாத திருக்கோயில்கள் ஸ்தாபனமாயிருப்பதால் அங்கே மதவிசாரணைகள் நாளுக்குநாள் அதிகமாயிருந்ததென்று நன்றாய்ப் பல முகாந்தரத்தால் விளங்குகின்றது. தென்னிந்தியாவில் வேறெந்தபட்டணத்திலும் இவ்வளவு கோவில்கள் கிடையாது.

பூர்வத்தில் தென்னிந்தியாவிலிருந்த குடிகள் எந்த மதத்தை அனுசரித்தார்களென்பதை உறுதியாய்ச்சொல்ல முடியாது. கி. மு. 300 வருஷத்தில் பௌத்தமதத்திற்கும், பிராமணமதத்திற்கும், மதமேன்மை விஷயமாய்வாதித்தப்பின்பௌத்தமதம் நாளுக்குநாள் இந்தியாவில் வியாபித்தும் குலைந்தும் வந்தது. அசோக அரசன்காலத்தில்நிலை

நாட்டப்பட்டு, இந்தியாவிலும், வெளிதேசங்களி
லும் பரவிற்று. அச்சக்ரவர்த்தி இந்த மதம்
வியாபிக்க வேண்டியதற்கு மதபோதகர்களை தெ
ன்னிந்தியா அரசர்களுக்கு அனுப்ப அவ்வரசர்
கள் அம்மதவிஷயமாய்ப் பிரசங்கஞ்செய்ய உத்தி
ரவு கொடுத்தான். அசோகன் தன் இராஜாங்
கத்தின் தென்கோடி பட்டணமான கஞ்சியில்
தன் ஆக்கினைபத்திரத்தை விளம்பரஞ்செய்தான்.
பௌத்தர்களுடைய கர்ணபரம்பரையான கதைக
ளோடு கி. மு. 220 வருஷத்தில் அசோகன் காஞ்
சிபுரத்தில் ஒரு ஸ்தம்பம் ஏற்படுத்தினதினால் திரா
விடர்களிருக்கும் இக்கஞ்சியில் பௌத்தர் பிர
வேசித்ததற்கு ஒரு அத்தாக்ஷியாய் ஏற்படுகிறது.
சுமார் எட்டுநூற்றாண்டு வரைக்கும் பௌத்தர்
களுக்கு இந்தத்தென்னிந்தியாவில் காஞ்சிபுரம்
முக்கிய ஸ்தானமாயிருந்தது. இப்படியிருந்தும்
அநேகமாயிரம் குடிகள் சைவமதத்தையே அனு
சரித்துக்கொண்டிருந்தார்கள் தென் இந்தியாவில்
2000 வருஷத்திற்குமேல் பலமதஸ்தர்களிருந்தி
ருப்பினும் ஒவ்வொரு மதஸ்தரும் தம் தம் மதா
சாரத்தை அனுசரித்தது மதப்போராட்டமில்லா
க்காரணமே. சிவன்கோவிலுக்கருகில்விஷ்ணுகோ
விலும் இவைகளுக்கிடையே பௌத்தாஸ்ரமமும்
சமணர் கோவிலுமிருப்பது போதுமான திருஷ்
டாந்தம். பல்லவர்கள் வைஷ்ணவர்களாயிருந்தும்
பௌத்தமதம் விர்த்தி அடைந்துகொண்டிருந்

தது. ராஜஸிம்மேஸ்வரர்கோவிலும் மற்ற சிவால
யங்களையும் கட்டிய பிற்காலத்தில் பல்லவர்கள்
பௌத்த மதத்திற்கிணங்கிய ரதத்தைப்போல்
மஹாபலிபுரத்தில் ரதங்கள் நிர்மித்தார்கள் இ
ராஜ இராஜேந்திரன் தஞ்சாவூரில் பிரஹதீஸ்வ
ராலயம் கட்டியதல்லாமல் பௌத்தர்களுக்காக
நாகப்பட்டணத்தில் ஒரு பௌத்த ஆலயமும்
கட்டி வேண்டிய உதவியும்செய்தான். நாம் முன்
னே சொல்லியபடி சீனதேச சஞ்சாரியாகிய ஹி
யூனதிசாங்கு, காஞ்சிபுரத்தைப்பார்த்திருக்கிறான்.
அமராவதி பட்டணத்திலிருந்து தென்கோடியில்
தான் கடைசியாய்ப் பார்த்த காஞ்சிபுரத்திற்கு
கி. பி. 637-வருஷம் ஜூலைமாதம் 30 தேதி வந்
தான். வடக்கே கொங்கண தேசத்திற்கும் தெ
ற்கே மலகூடத்திற்கும் மத்தியிலிருக்கும் தல
பிசோ தேசத்திற்கு முக்கிய பட்டணமான கியா
ஞ்சிபுலோ யென்ற நகரத்தைப்பார்த்ததாக தன்
யாத்திர கிரந்தத்தில் எழுதியிருக்கிறான். காஞ்சி
யில் 1000 பௌத்தர்களையும் 100 பௌத்தா
ஸ்ரமங்களையும் கண்டதாகத் தெரிகிறதினால் அக்
காலத்தில் பௌத்த மதத்தை ஜனங்கள் கொண்
டாடினார்களென்பது விசதமாகிறது. இங்கே
ஒருமாதகாலம் தங்கி பிறகு வடஇந்தியாவுக்குப்
போனார். கியாஞ்சிபோலோ யென்னும் பெயர்
ஒருகாலத்தில் காஞ்சிபுரத்திற்கு வழங்கிவந்த
தை பர்கூசன் யென்பவர் ஒத்துக்கொள்ளவில்லை.

இப்பெயர் நாகப்பட்டணத்தைக் குறிக்கிறதாக நம்புகிறார். இவை பொருத்தமில்லை. நாகப்பட்டணம் எந்தகாலத்திலும் எந்த ராஜ்யத்திற்கும் பிரதான பட்டணமாக இருக்கவில்லை. காஞ்சிபுரம் என்பது பியாஞ்சிபோலோவும் அநேகமாய் சப்தத்தில் ஒருமைப்பட்டிருக்கிறதேயொழிய நாகப்பட்டணத்தோடு சம்பந்தங் காட்டவில்லை. பியாஞ்சிபோலே எந்த ராஜதானிக்கு முக்கிய பட்டணமாகச் சொல்லப்பட்டிருக்கிறதோ அந்த ராஜதானியும் அக்காலத்திய சோழராஜதானியும் ஒன்றாகவேயிருக்கிறது. இந்த காலத்தில் ஜயின சமயமும், பௌத்தசமயமும் பரவி யிருந்தது. ஆனால் பௌத்த சமயம் அதிக உயர்ந்த நிலையிலிருந்தது. திராவிடர்களில் பெரும்பாலார் சைவமதஸ்தர்கள். கிறிஸ்துபிறந்த சில நூற்றாண்டுக்குப்பின் ஜயினமதம் வியாபித்தது. 8-வது 9-வது நூற்றாண்டில் நல்ல நிலைமைக்குவந்தது. வட ஆற்காட்டில் பஞ்சபாண்டவமலைக்கருகாமையிலுள்ள வில்லியாக்கத்தில் ஜயினர்கள் வலிமைபெற்றிருந்தார்கள். சங்கராசாரியர் காஞ்சிக்குவந்தகாலத்தில் அநேக ஜயின கோவில்களிருந்தன. அவர் ஜயினர்களை நாஸ்திக மதஸ்தினரென்று பழுது கூறினார். அதுமுதல் ஜயினர்கள் தலைசாய்த்தனர். காஞ்சிக்கருகாமையிலுள்ள ஒரு ஜயினர் கிராமத்தில் 1387 - 1388-ம் வருஷத்தில் கூட்டப் புதிதாய் ஒரு ஜயினர்கோவில் கட்டப்பட்டது. இவ்வி

டங்களில் ஜைனர்களும் ஜயினர்கோவில்களும் இப்போதுமிருக்கின்றன. இச்சயினருக்கு சோழ அரசனல் அநேக இடுக்கண்கள் நேரிட்டதினலும் இராமாநுஜாசாரியார் தலையெடுத்து மதப்பிரசங்கங்கள் செய்துவந்ததினலும் ஜயினர்கள் முற்றிலும் பலக்குறைவடைந்தார்கள்.

ஜயினர்களும் பௌத்தர்களும் அநேக நாகரீகங்களை தென்னிந்தியாவில் பரவச்செய்தார்கள் மதவித்தியாசமில்லாமலும், மனுஷர்யத்தனத்தினலும், ஜீவகாருண்யத்தினலும், அவர்கள் பழகிவந்ததினல் பிராமணரல்லாதவர்களிடத்தில் அதிக பிரிதியுண்டாகி அவர்களிடத்தில் அதிக உறவாடிவந்தார்கள். இவர்கள் தொன்றுதொட்டு பௌத்த மதத்தினரோடு ஒற்றுமையுடனே வாழ்ந்தார்கள் பிந்திய பல்லவர்களும், சோழர்களும் சைவ மதத்தினராயிருந்தபோதிலும் புத்தர்களிடத்திலும் ஜயினர்களிடத்திலும் நன்கு பாராட்டி வந்தார்கள். ஆறுவது நூற்றாண்டின் கடையியில் வைணவமதம் திருமழிசை யாழ்வாரால் பரவத் தலைப்பட்டது. ஆறு, ஏழு, எட்டு நூற்றாண்டுகளில் மாணிக்கவாசகரும், திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரெனும் அப்பாரும் சுந்தரமூர்த்தியும் முறையேதோன்றிச் சைவமதத்தை முன்போல் தழைக்கச்செய்தனர். ஒவ்வொருவரும் யாத்திரசஞ்சாரஞ்செய்தகாலத்தில் கஞ்சிக்குவந்திருக்கிறார்கள். சங்கராசாரியருடைய புத்தி

சாதுர்யமான மதபோதனையால் பௌத்தமதமும் ஜைனமதமும் க்ஷீணதிசையடைந்தது. தென்னிந்தியாவில் அநேகமடங்களைக்கட்டுவித்தார். கஞ்சியில் சங்கரபீடத்தை உண்டுபண்ணினார், அவர் பிராமணர்களுக்குமாத்திரம் போதித்துவந்தார். சங்கரார்சாரியார் சைவமதப்பிரபாவத்தைப்பற்றி மாத்திரம் பிரசங்கிக்காவிட்டாலும் அவர் சிஷியர்கள் சைவமதத்தையே ஊர்ஜிதப்படுத்தினார்கள். ஆனதுபற்றியே சங்கராசாரியார் பீடத்தைச்சேர்ந்தவர்கள் சைவர்களாகவேயிருந்தார்கள். சங்கராசாரியர் காலஞ்சென்று ஒன்று இரண்டு நூற்றாண்டுவரையில் தெற்கே சைவமதத்தையே தழுவிவந்தார்கள். ஆனால் அவர் மதக்கோட்பாடுகளை ஜனங்கள் அதிக சிரமத்தோடு அனுசரிக்கவேண்டியதாயிருந்தது. மதக்கோட்பாட்டிலடங்கியதத்வார்த்தங்களை எல்லா ஜனங்களும் இலகுவில் உணரமுடியாதாயின. கடவுளது நிஜரூபத்தை ஒவ்வொருவருக்குங் காட்டவிரும்பினார்கள். 11-வது நூற்றாண்டில் இராமாநுஜாசாரியார் மத சீர்திருத்தஞ்செய்யத்தோன்றினார். வைஷ்ணவ ஜனங்களிடத்திலுள்ள பிரீதியைப் பிரசங்கஞ்செய்து ஜனங்கள் கோரியபடி விஷ்ணுவினது ரூபத்தைப் பிரசங்கமாகக் காண்பித்தார். தந்தையின் தன்மையுள்ள விஷ்ணுவைப்பற்றியும் தாயின் குணமுள்ள இலக்குமியைப்பற்றியும் வெகுவாய்ப் போதித்துவந்தார். இவர் ஸ்ரீ பெரும்

பூதூரில் 1066-ல் பிறந்தவர். கஞ்சியில் முதல் முதல் கல்விகற்றார். பிறகு ஸ்ரீரங்கத்தில் பயின்றார். இராஜவெளிகளில் திரிந்து தன் இராமாநுஜபாஷியத்தைப் பிரசங்கித்து சோழ அரசனால் அனுமதிபெற்றார். மைசூருக்குப்போய் அதனை தலைமைப்பட்டண மாக்கிக்கொண்டார். சோழ அரசன் இறந்துவிட்டபின் இராமாநுஜாசாரியார் வெளிகளில் திரிந்து அநேகமடங்களை ஸ்தாபித்தார். அவைகளுள் அதிமுக்கியமானது, கஞ்சி, ஸ்ரீரங்கம, தாயத்திரி, அகோபடலயம் என்பதேயாம். ஆழ்வார்களென்று சொல்லப்பட்ட அநேகமதப் பிரசங்கிகளுள் இவர் ஒருவர் முக்கியமானவர்பன்னிரெண்டு ஆழ்வார்கள் கி.மு. 2-வது நூற்றாண்டில் விருத்தியாயிருந்தார்கள். இவர்கள் பிராமணர்களல்லாதிருந்தபோதிலும் பிராமணர்களால் மரியாதைசெய்யப்பட்டுவந்தார்கள். இதனால் வைகுண்டபதவி பெறுவதற்கு முக்கியமல்லவென்பது விளங்கும். இப்பன்னிரண்டு ஆழ்வார்களுள் மூவர் கஞ்சியில் வசித்தார்கள். இராமாநுஜாசாரியார் இறந்துமூன்று நூற்றாண்டுகளுக்கெல்லாம் வைணவமதம் அபிவிர்த்திகுறைந்தது. 1268 வருஷத்தேஷடி கிராமத்திற் பிறந்த வேதாந்த தேசிகன திரும்ப வைணவமதம் தலையெடுக்கச்செய்தார். இவர் ஏற்பாட்டில் வைணவமதம் வடகலை, தென்கலை யென்ற இரண்டு பிரிவுகளாயிற்று. வடகலையாருக்கு வேதாந்தத்தைப் பிரதானமாக்கினார்.

(வடகலை - வடதேசத்தவர் ஞானம்) மணவாள மாமுனி தென்கலையாருக்குச் சிறந்தது. (தென்கலை—தென்தேசத் வர்ஞானம்) இப்போதும் கஞ்சியில் ஜயின சைவ ஸ்ரீவைஷ்ணவர்களுண்டு. ஜயினமதம் க்ஷீணித்துக்கொண்டுவந்தன. சைவமதத்தினர் சிவகஞ்சியிலும், வைணவமதத்தினர் விஷ்ணுகஞ்சியிலும் வசிப்பதுடன் மகம்மதியர்களும் கிருஸ்தவர்களும் அங்கு குடியிருக்கின்றார்கள்.

---

## ஐந்தாவது அத்தியாயம்.

### ஜனங்கள் ஆளுகை.

ஆதியில் நமது தென்னிந்தியாவில் கைத்தொழிலாளிகளே தாழ்ந்த வகுப்பினராகக் கருதப்பட்டார்கள். ஆயினும் ரோம் தேசத்தில் இருந்ததுபோல அடிமைகள் நமது தேசத்திலிருந்ததில்லை. பொருளால் ஜனங்கள் உயர்ந்த நிலைமையுள்ளவர்களும், மத்திய நிலைமையுள்ளவர்களும், தாழ்ந்த நிலைமையுள்ளவர்களுமாக முத்திறத்தினராயிருந்தார்கள். அவர்களில் முதலிருதிறத்தினர்களும்பட்டுகளினாலும் பருத்திகளினாலும் ஆகிய உடைகளை உடுத்திவந்தார்கள். மூன்றாந்தரத்தவர் தங்கள் தாழ்ந்த நிலைமைக்கு அறிகுறியாக ஒரே அங்கியை யுடுத்திவந்தார்கள்.

அக்காலத்தில் நமது தென்னிந்தியாவில் வெள்ளியிருந்ததில்லை ஆகையால், பொன்னையே நகைகளுக்கு உபயோகித்து வந்தார்கள். சாப்பாட்டுக்கு அரிசியையே உபயோகித்து வந்தார்கள். இசையில் மிக்க விருப்பமுடையவர்களாய் அதை மிகவும் பயின்று வந்தார்கள். அக்காலத்தில் ஏழைகள் வீடுகள் மண்ணாற்சுவரும், ஓலையால் மேற் கூரையும் அமைத்துக் கட்டப்பட்டிருந்தன. நகரங்களில் கல்லால் சுவரெழுப்பி மேற் கூரையில் ஓடுகள் போட்டுக் கட்டப்பட்டிருந்தன. அவ்வீடுகளில் அமைக்கப்பட்ட பலகணிகள் மான்கண்கள்போன்ற சிறு துவாரங்களே. அரசர்கள் தாங்களே நேரில் ஜனங்களின்வழக்குகளை நன்கு விசாரித்துத் தீர்த்துவந்தார்கள். அரசர்களுக்குத் தீர்வையும் நிலவரியுமே முக்கிய வருவாய். முன்னே தென்னிந்தியாவானது சைனா, எஜிப்டு, ரோமாபுரி என்னும் இத்தேசங்களோடு மிகுதியாக வியாபாரஞ்செய்து வந்தமையால் தீர்வைவரி மிகுதியாக வந்துகொண்டிருந்தது. நிலவரி மகசூலில் ஆறில் ஒருபங்காயிருந்தது. ராஜாங்கத்தாரால் விவசாயத்தின் பொருட்டுக் குடிகளுக்கு நீர்வருவாயுண்டாக்கப்படும் பக்ஷத்தில் குடிகள் அந்நீருக்காக ராஜாங்கத்தாருக்கு நீர்வரி செலுத்துதலுமுண்டு. அக்காலத்தில் பௌத்த மதத்தினர் மிகுதியாக இருந்தார்கள். அவர்களாலே கல்வி மிகுதியாயிற்று.

பௌத்தர்கள் காலத்தில் தீர்வைநீக்கிவிடப்பட்டமையால் ரோம் முதலிய வெளிதேசங்களோடு செய்துவந்த வியாபாரம் மிகவும் விருத்தியாயிற்று. அவர்கள் காலத்தில் தண்டனைகள் மிகவுங் கடுமையாயிருந்தமையால் குற்றங்கள் அதிகம் நடவாமலிருந்தன. பல்லவ ராஜர்கள் காலத்தில் கோவில்கள், மண்டபங்கள் முதலிய பல பெரிய கட்டடங்கள் கட்டப்பட்டன. பல தடாகங்கள் உண்டாக்கப்பட்டன. கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் பரிமேலழகர் தோன்றி காஞ்சியில் மிகச்சிறந்த தரும நூலாகிய திருக்குறளுக்குப் புலவோர் யாவரும் கொண்டாடத்தக்க சிறந்ததோர் உரையியற்றி அஃதியாவருக்கும் உபயோகப்படும்படிச்செய்தனர்.

அந்நூற்றாண்டின் ஈற்றில் முதலாதித்தியன் என்னும் சோழமன்னன் பல்லவரென்று காஞ்சிபுரத்தை கைப்பற்றினன். அவ்வரசன் குமாரன் பராந்தகன் என்பவன் காலத்தில் கிராமங்கள் யாவும் நன்குப் பரிபாலிக்கப்பட்டு வந்தன. அப்போது ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒருசபையுண்டு. அச்சபைகளில் சிறிது அந்தஸ்தும், முப்பத்தைந்துக்குக் குறையாத வயது முள்ளவர்களை அங்கத்தினர்களாக ஏற்படுத்தப்பட்டு வந்தார்கள். அச்சபைகளில் பல உட்பிரிவுகள் உண்டு. அவையாவன:—தோட்ட முதலியவற்றின் விசாரணைசபை, ஏரி, குளம் முதலியவற்றின்

விசாரணைசபை, நியாயவிசாரணைசபை, பொன்னைப் பற்றிய விசாரணைசபை, மற்றவற்றைப்பற்றிய விசாரணைசபை, இவையன்றிப் பஞ்சவர்ராவரியம் என்று வேறொரு சபையுமிருந்தது. அஃது இவ்வைந்து சபைகளையு மேல்விசாரணைசெய்யும் அதிகாரமுடையதாயிருந்தது மிக்க கௌரவமுள்ளவர்களே இச்சபையின் அங்கத்தினராதற்குரியவர்கள்.

காஞ்சிபுரத்துக் கருகில் இருக்கும் உத்தரமல்லூரிலிருந்து கிடைத்த சிலாசாசனங்களால் அச்சபைகளுக்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்தவகை நன்றாய் விளங்குகின்றது. அச்சபை யங்கத்தினர்கள் கால்வேலிக்குக் குறையாத நிலமுள்ளவர்களாகவும், வரிகட்டுகின்றவர்களாகவும், சொந்த வீடுள்ளவர்களாகவும் முப்பத்தைந்துக்கு மேற்பட்டு எழுபதுக்குட்பட்ட வயதுள்ளவர்களாகவும் வைதிக மந்திரங்களை யுபதேசிக்கக் கூடியவர்களாகவும் வியவகாரங்களில் பெரியவர்களாகவும், சாஸ்திரப்படி நடப்பவர்களாகவும், நல்லவழியில் சம்பாதிப்பவர்களாகவும் இருத்தல்வேண்டும். கணக்கொப்பிக்கத்தவறின அங்கத்தினர் அவர்களின் சுற்றத்தவர்களாகவும், பஞ்ச மகா பாதகர்களாகவும் அவர்களின் சுற்றத்தவர்களாகவும் அறிவில்லாதவர்களாகவும், துஷ்டர்களாகவும், ஜாதிப் பிரஷ்டர்களாகவும், திருடர்களாகவும், மது வருந்துகின்றவர்களாகவும் இருத்தல்கூடாது. மேற்படி யூரார் தங்கள் ஊர் ஜனங்களை முப்பது பிரிவினர்களாகப் பிரிப்பார்கள். ஒவ்வொரு பிரிவினரும் தத்தமக்கு உத்தேசமானவர்களின் பெயர்களை யெழுதி அங்ஙனம் எழுதிய கட்டுகளை ஒருகட்டாகக் கட்டி மத்தியஸ்தர்கள் முன்னிலை

யில் வைப்பார்கள். கிராமத்தினரும், அர்ச்சகரும் மத்தியஸ்தர் முன்னிலையில் ஒரு கட்டை அவிழ்த்து பானையில்போட்டு ஒரு சிறுவனை அழைத்து அப்பானையில் ஒவ்வொரு கட்டை எடுக்கச் சொல்வார்கள். அவன் ஒரு கட்டை எடுத்துக்கொடுக்கவும் மத்தியஸ்தர்கள் அச்சீட்டில் குறித்துள்ள பெயரைச் சபையார் முன் படித்துக்காட்டி ஓரேட்டில் பதித்துக்கொள்ளுவார்கள். அப்பானையிலிருக்கும் மற்றைய கட்டுகளை எடுத்துவிட்டு இன்னொரு கட்டை அவிழ்த்து அப்பானையில் போட்டு அந்த சிறுவனை ஒரு கட்டை எடுக்கச் சொல்லுவார்கள் இவ்வாறு முப்பது கட்டுகளை எடுத்ததும் முப்பது பெயர்களை கமிட்டிகளுக்கு நியமிப்பார்கள். கருப்புக்காலத்தில் குடிகளுக்கு நிலவரிதள்ளி கொடுப்பதுண்டு அக்காலத்தில் கோயில் தர்மகர்த்தர்களும் குடிகளுக்கு பணசகாயம் செய்வதுண்டு.

காஞ்சிபுரிக்கு விஜயநகர் அரசர்கள் வந்தபோது அந்நகரின் கோவில்களை புதுப்பித்தும் நகரமதை அலங்கரித்தார்கள். விஜயநகர அரச க்ஷீணித்ததும் கஞ்சி முகலாயராலும் பின்பு கர்நாடக ஐதர் சண்டைகளாலும் க்ஷீணித்துக்கொண்டு வந்தன. அங்கிலேய கவர்ன்மெண்டார் கைப்பற்றியதும் கஞ்சி நாளுக்குநாள் அபிவிருத்தியாகி வந்தன.

எம். வி. பிரஸ், வேப்பேரி — மதராஸ்.

58622




LITHO. AT THE LOKANANDINI PRESS, TRIPLICANE.